# சிரித்திரன்

அகளங்கன் (5) ராஜன் புத்தகசாலை
J. M. C. பில்டிங்
12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்

எரிவு






ஒருவர்: இது பைத்தியகார உலகம்;

மற்றவர்: ஏன்.

ஒருவர்; குடும்பக்கட்டுப்பாட்டை பிரசாரம் செய்கிறது அதே சமயம் குழந்தைகள் ஆண்டையும் கொண்டாடுகின்றது.

புரட்டாதி 1979
ஐப்பசி

விலை ரூபா
1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் விரும்பும்
தேனான பாடல்களைத் தெளிவாகப்
பதிவுசெய்ய

ஒலிப்பதிவுத்துறையில் அனுபவமிக்க
'ரேடியோஸ் பதி' யை நாடுங்கள்...

- தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் மும்மொழிப் பாடல்களையும் முத்தாகப் பதிவுசெய்ய
- வானொலிக்கருவி, ரேப் ரெக்கோர்ட் மணிக்கூடு ஆகியவற்றை திருப்திகரமாக திருத்தம் செய்ய...
- ரேடியோ கெஸட், ரேப்ரெக்கோர்ட் மணிக்கூடுகள் வாங்க...

ரேடியோஸ்பதி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7805

தொலைபேசி: 7169, 8025.

வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்

கணேசன் ஸ்ரோர்ஸ்

KANESAN STORES

63, 78, K. K. S. Road
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

புரட்டாதி 1979 நகை: 17 சுவை: 9

இம்மாதப் பிரமுகர்:

## இந்திராஸ்திரம்...



''என்னைச் சர்வாதிகாரி, தேசத்துரோகி, ஊழல்காரி என்று திட்டியவர்களும், சிறையில் இட வேண்டும் என பிடிவாதமாக நின்றவர்களும் இன்று என் ஆதரவு இன்றி அவர்களால் அரசாங்கம் நடத்தமுடியாது...
காலம் வரும்போது நாம் பாலத்தைக் கடந்து செல்வோம்.''

—இந்திர காந்தி

## எம்
# என். எம்.

சூரியனின் ஒளி முகத்தை காண்பதற்காகவே பிறவி எடுத்தது போன்று அவன் எங்கெங்கு நிற்கிருனே அங்கங்கெல்லாம் தன் மலர்ச்சிமிக்க இதழ் விரிப்பை அர்ப்பணித்து நிற்குமாம் சூரிய காந்தி மலர் —தொழிலாள வர்க்கத்தின் பிரகாசமான வாழ்விற்காக, அவர்கள் முகத்தின் ஒளியைக் காண்பதற்காக... அவர்கள் எங்கெங்கு சிதறிப் பரந்து கிடந்தார்களோ...அங்கெல்லாம்...இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தன் அறிவும், ஆற்றலும் மிக்க உழைப்பை அர்ப்பணித்த என். எம் என்ற அந்த இரண்டெழுத்து மனிதனும் ஒரு சூரியகாந்தி தான்.

—'சூரியகாந்தி மலர்' என்ற அந்நிய ஆங்கிலேய ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்ட இயக்கத்தின் தலைவராக...முதல்மலராக...

—இந்த நாட்டின் முதல் அரசியல் கட்சியின் - சோஷலிஸ அமைப்பின் ஸ்தாபகராக... தலைவராக

—தனியார் -, அரச, தோட்ட தொழிலாளர்கள் அனைவரையும் ஸ்தாபன ரீதியில் ஒன்று திரட்டி பலம்மிக்க-சக்திவாய்ந்த தொழிற் சங்கத்தை ஏற்படுத்தி அவர்களின் உரிமைகளுக்காக பலதடவை வரலாற்று புகழ்மிக்க போராட்டங்களை நடாத்திய புரட்சிவீரனாக...

—1947-ம் ஆண்டு நடாத்திய மாபெரும் ஹர்த்தால்மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிவயிற்றைக் கலக்கிய, நமது சுதந்திரத்திற்கு அடிகோலிய சுதந்திர புருஷனாக...

—தேசிய பொருளாதாரத்தை உயர்த்துவதன் மூலம் நம் தேசியப் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்த்து சமதர்ம சமூகத்தை ஏற்படுத்த முடியுமென்று திடமாக நம்பிய பொருளாதார மேதையாக...

—வடக்கிலும், தெற்கிலும் வாழும் தெளிந்த அரசியல் அறிவு மிக்கவர்களால் மதிப்பும், பாராட்டும் பெற்ற, ஒரு முகமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட, அரசியல் ஞானியாக... இந்நாட்டு இடது சாரிய இயக்கத்தின் மூலவேராக திகழ்ந்த—

ஓர் சிறப்புமிக்க வரலாற்று நாயகனாக...

நம்நாட்டு வரலாற்று சாசனத்தின் சிலபொன் அத்தியாயங்களின் ஆளுநராக... திகழப்போகும்

என். எம் என்ற இரண்டெழுத்து மனிதனின் மறைவு — பேரிழப்பாகும். அவரை இழந்தாலும்—

அவர் நாம் வெல்வதற்காக காட்டிய இலட்சிய வழியில் நமது சுவடுகள் தொடர்ந்து செல்ல வேண்டுமென்பதே அவரின் இறுதி ஆசையாக இருந்திருக்கும் என்பது உறுதி...

ரோஜாக்கள் உதிர்கின்றன... புதிய ரோஜாக்களும் மலர்ந்து கொண்டுதான் இருக்கின்றன...

என்றாலும் அந்த முதல் மலரின் நினைவுகள் மறைவதே இல்லை...

உதிர்ந்துவிட்ட அந்த சிவப்பு ரோஜாவுக்கு எமது அஞ்சலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பரமநாதன் மூதூர்

கே: கலைஞன் எப்படிப்பட்டவன்?

ப: அவன் ''மூட்'' ஆள்.

● ●

சி. ராமநாதன் பரந்தன்

கே; மனிதன் எப்போது நேரம் பார்ப்பதில்லை?

ப: சிங்காரத்தில் மறந்திருக்கும் போது கடிகாரத்தை மறந்திருப்பவன்.

● ●

சிவநேஸ்வரி பாலசிங்கம் தாவடி

கே: பஸ் நிலையத்தில் சிரித்திரன் காரியாலயம் இருக்கிறதே. பஸ்ஸிற்குக் காத்திருப்போரைப் பார்க்கும் போது உங்களது மனதில் என்ன தோன்றும்?

ப: வயது போகுது பஸ்போகவில்லையே என எண்ணுவேன்.

● ●

க. குமார் மானிப்பாய்

கே: இன்று எங்கும் ஒலிக்கும் ஓரம்போ பாடல்பற்றி உமது கருத்து?

ப: பண்ணும் பண்பும் சோரம் போய்விட்டதை எடுத்துக் காட்டுகிறது.

● ●

செல்வஜோதி மூதூர்

கே: மோட்சம் எவ்வளவு தூரம் மகுடியாரே?

ப: குறுக்குவழி போபவனுக்குத் தூரத்தில் இருக்கிறது. நேர் வழி போபவனுக்கு கிட்ட இருக்கின்றது.

ம. முத்துராமன் மாதகல்

கே; யாழ்ப்பாணக் கிணறுகள் எண்ணெய்க்கிணறுகளாக மாறினால்?

ப: கிணற்றுப் பங்குச்சண்டை உக்கிரமடையும்

● ●

செ. பரமநாதன் வவுனியா

கே. காதலுக்கும் நாகரீகத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இரண்டும் கண்ணை மறைக்கும். கண்ணை மறைத்து தலை சீவுவதும் இன்று நாகரீகமல்லவா.

★ ★

த. கனகராசா விஸ்வமடு

கே: பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை... உண்மைதானா?

ப: எரிபொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை.

● ●

த. சிதம்பரநாதன் கரவெட்டி

கே: சிறைச்சாலை வாழ்வு ஒருதனின் தலை எழுத்தானால்?

ப; சிறைச்சாலை விதி அவன் தலை விதி.

● ●

நா. பரமஜோதி பளை

கே: நாட்டின் முன்னேற்றத்திற்காக ரத்தம் சிந்தும் தியாகிகள் நம்நாட்டில் உளரோ?

ப: தமது முகத்தின் அழகிற்காக இரத்தம் சிந்துபவர்கள் உளர் முகச்சவரம் செய்யும்போது சிந்துகின்றார்களல்லவா ரத்தம்.

செல்வி உஷா நாகேஸ்வரன் நல்லூர்

கே: அற்ப்பனுக்குப்பவிசுவந்தால்

ப: அர்த்தராத்திரியில் கூலிங் கிளாஸ் போடுவான்.

● ●

செல்வி குமுதினி நேசராசா கொழும்பு

கே: என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!

ப: நடக்காமல் என்ன செய்வது பெற்றோல் விலைகூடிவிட்டதே!

● ●

சி. சிவராமக்கிருஷ்ணன், திருமலை

கே: எவனிடம் சிறிதளவும் ஜீவகாருண்யமில்லை?

ப: மருந்தளவேனும் ஜீவகாருண்யமில்லாதவன் மருந்தில் கலப்படம் செய்பவன்.

● ●

செல்வி மணிமேகலை மல்லாகம்

கே: விவசாயி ஒளிமயமான எதிர்காலத்தை எதில் காண்கின்றான்?

ப: கார் இருள் முகிலில்.

● ●

செல்வி மனோரஞ்சிதம்ராமநாதன் யாழ்ப்பாணம்

கே: நீர் சினிமாப்பாட்டுக் கேட்டு கண்ணீர் வடித்ததுண்டா?

ப; உண்டு. காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் என்ற பாட்டைக் கேட்கும் போது கண்ணீர் சிந்துவதுண்டு. காணி விலை எம்மையெல்லாம் கண்ணீர் சிந்தவைக்கிறது.

● ●

ந. வடிவேலு தும்பளை

கே: கடவுளா காசா பெரிது?

ப: கடவுள் பெரிதானால் கற்பூரம் சந்தனம் சலப்படமாக இருக்குமா:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி சரோஜா நாகமுத்து
சுண்டிக்குளி

கே: மகுடியாரே உம்முடைய கற்பனையில் ஒரு நகைச்சுவை கூறும் பார்க்கலாம்?

ப; ஒரு சோம்பேறி கொட்டாவி விடுவதே சிரமமான வேலையெனத் தற்கொலை செய்து கொண்டானும். ஒரு சோம்பேறி சுவாசிப்பதேசிரமமான வேலை யெனத் தற்கொலை செய்துகொண்டானும். ஒரு உயிரை வெறுத்த சோம்பேறி தற்கொலை செய்வது சிரமமென அழுது கொண்டிருந்தானும்.

● ●

ப. முத்துலிங்கம் சிலாபம்

கே: மாணவியை சையிக்கிளில் வட்டமிடும் மாணவனைப் பற்றி உமது கருத்து?

ப: பரிசோதகரும் அவன் பதில் தாளில் வட்டமிடுவார்.

★ ★

ப. செல்வநாயகி அல்வாய்

கே: மகுடியாரே! ஒரு காதல் கடிதம் தருகின்றேன்... என் காதலியிடம் சேர்ப்பீரா?

ப; அவள் அப்பன் இடிஅமீனாக இருந்தால்.

● ●

ப. சிவபாலன் வட்டுக்கோட்டை

கே: தமிழன் வாழ்க்கை சிக்கல் நிறைந்தது என்கிறேன்?

ப; சிக்கல் இடியப்பம் சாப்பிடும் தோஷ பாவமோ தெரியவில்லை.

□ □

செல்வி ஞானமணி முருகையா
நல்லூர்

கே: மகுடியாரே... பால முரளி கிருஷ்ணாவின் சங்கீதத்திற்கும் மதுரைசோமசுந்தரம் அவர்களின் சங்கீதத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: இரண்டும் அமிர்தம் ஒன்று திருப்பதி லட்டு, மற்றது பழனிப் பஞ்சாமிர்தம்

த. தம்பிராசா மருதனமடம்

கே: எவன் வடிகட்டிய முட்டாள்

ப: மயிலைக் கொன்று விட்டு அதைப்பார்த்து,உயிர்த்துடிப்புள்ள ஓவியம் வடிக்க முயல்பவன் வடிகட்டிய முட்டாள் கலைஞன்,

● ●

க. ஞானசுந்தரம் அச்சுவேலி

கே, எவன் வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவாதவன்.

ப: ஆபீஸ் நேரத்தில் மதுச்சாலையில் மயங்கிக் கிடப்பவன்

● ●

செல்வி சுந்தரேஸ்வரி பரமகுரு
தெல்லிப்பளை

கே: எவனின் தலையெழுத்து அனுதாபத்திற்குரியது?

ப: ஆசிரியரின் கையெழுத்தைப் புரியாது கலங்கும் மாணவர்களின் தலை எழுத்து.

● ●

சி. கருணைகரன் அடம்பன்

கே: ஒருவன் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழ என்ன தேவை?

ப: பொருள்+பசு+தாரம்
(பொருள் ஆ தாரம்)

● □

செல்வராணி முத்தையா
வவுனியா

கே; கெட்டவனைக் காதலிக்கின்றேன் புத்தி கூறும்?

ப: பிழையான வழிபோவதற்கு டோர்ச்லையிற் தத்துதவுவதா

● ●

த. ஞானசேகரன் சாவகச்சேரி

கே: அரசியல் வாதிகளின் தலை எழுத்துப் பற்றிச்சிலவரி எழுதுக

ப; அவர்களுக்குப்புகழுக்கும்இடமுண்டு, புகலிடமும் உண்டு.

---

வாசகர்களின் கேள்விகளில் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 6 மாதங்கள் 'சிரித்திரன்' இதழ் அன்பளிப்பாக வழங்கப்படும். —மகுடியார்

செல்வராஜா அச்சுவேலி

கே: "பசித்தவனுக்குப் பஞ்சாமிர்தம் கிடைத்தால் போன்று' இது போல் நீர் உவமானம் கூறும்?

ப: 'லாட்ரி' அடித்தவனுக்கு 'லொட்ரி' கிடைத்தாற் போன்று.

● ●

செல்வி கனகேஸ்வரி பரந்தன்

கே: வாழ்க்கைக்கும் நாவலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: வாழ்க்கையில் எதிர்பார்த்தது நடக்காவிட்டால் கவலை நாவலில் எதிர்பார்த்தது நடந்தால் கவலை.

□ □

ச. மணியம் பளை

கே: நாகரீகத்தின் நிலை என்ன? பொருளாதாரத்தின் நிலை என்ன?

ப: சாறி பிளவுஸ் இடைவெளியும் பெருகுது ஏழை பணக்காரன் இடைவெளியும் பெருகுது.

● ●

எ. தவகுணராசா யாழ்ப்பாணம்

கே: எவனின் ஆசீர்வாதம் அருவருப்பானது?

ப; கறுப்பு மார்க்கட் பணத்தால் லஞ்சத்தால் நீலம் பாய்ந்த கரங்களால் செய்யும் ஆசீர்வாதம்அருவருப்பானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட.

□ □

செல்வி அனுஷா ராமநாதன்
வெள்ளவத்தை

கே; காலம் சென்ற மவுன்ட்பேட்டன் பிரபுபற்றி உங்கள் கருத்து

ப: ஆங்கிலேய கலாச்சாரத்தில் பூத்து நறுமணம் பரப்பிய பூ வாடிவிட்டது?

□ □

பரமேஸ்வரி தம்பையா மல்லாகம்

கே: அமெரிக்காவிற்கு கசப்பானது எது?

ப: (பிடெல் காஸ்ட்ரோ) Fidel Castro அவர் அமெரிக்காவிற்கு Castor oil, போன்றவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரான்லி வீதியிலே

சகலவிதமான

மோட்டார் உதிரிப் பாகங்களுக்கு

விஜயம் செய்யுங்கள்

## காந்தா ஸ்ரோர்ஸ்

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்

சேட்டிங் சூட்டிங் சாறிகள்

அழகுக்கு அழகூட்டும் புடவை வகைகளுக்கு

☐

☐

☐

☐

## ஜோதி புடவை நிலையம்

கண்டி ரோட், சாவகச்சேரி

## தொழில்பெருக வளம் குவியும்...

வளம் தரும் தொழிலுயர
வழிகாண விழைகின்றீர்களா?

☐ கைத்தொழில்களை ஆரம்பிக்க
☐ அவற்றை நிர்வாகம் செய்ய
☐ விஸ்தரிக்க

எந்திரவியல் பொறியியலாளரின்
ஆக்கபூர்வமான ஆலோசனைகளைப் பெற
தொடர்பு கொள்ளுங்கள்

எந்திரவியல் பொறியியலாளர்.
மே/பா சிரித்திரன்
559, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு:

## சிவம் இன்டஸ்றீஸ்

கைதடிச் சந்தி,
கைதடி.

## சிரித்திரன்

1 வருட சந்தா 15-00
6 மாத சந்தா 7-50

பணத்தை மணி ஓடராக

சி. சிவஞானசுந்தரம்
559, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்க்கு

# கண்மணி

வி. சந்திரகுமார்

எங்கே பறவையும் மிருகமும் ஒற்றுமையாக இருக்கின்றன? என கூறுகிறோம். ஆனால் பலபறவைகளும் மிருகங்களும் உண்மையிலேயே எவ்வளவு ஒற்றுமையாகச் சீவிக்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா? அது மட்டுமல்லாது இதனால் இரண்டும் நன்மையடைகின்றன! கீழேசில ஒற்றுமைகளைப் பாருங்கள்.

காடுகளில் 'தேன்குருவி' என்னும் ஒருசிறியபறவையுண்டு. இது தேனையும் தேனீக்களின் குடம்பிகளையுாமயுண்டு வாழ்கின்றன. இவற்றிற்கு தேனைப்பருகுவதற்கு ஏற்றவாறு நீண்ட மெல்லிய சொண்டு உண்டு.

தேன் குருவியானது காடுகளில் அலைந்து திரிந்து தேன்கூடு அதன் கண்ணில் பட்டதும் அதுமுதலில் ஒரு கரடியை உதவிக்கு நாடும்.

கரடியானது தூக்கத்திலிருப்பினும் தேன்குருவி தனது செட்டையினால் அடித்தும் பலவித ஓசைகளை எழுப்பியும் கரடியைத் தூக்கத்திலிருந்து எழுப்புமாம்!

தேன்குருவியின் இச்செய்கையைக் கண்டு கரடி கோபம் கொள்ளாது மாறாக அது குருவியின் செய்கையைப் புரிந்து கொண்டு அதன் அழைப்பை ஏற்று அதன்பின்னே செல்லும்.

தேன்குருவியும்கானகத்தினூடே தாழ்வாகப்பறந்து பல ஒலிகள் எழுப்பியவாறு கரடிக்கு வழிகாட்டிச்செல்லும்!

கரடி தேன்கூட்டைக் கண்டதும் தேனீக்கள் கலைத்துவிட்டு, வயிறுநிறைய தேனையுண்டு விட்டு கூட்டை அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிடும். பின்னர்தேன் குருவி மிகுதித்தேனையும் குடம்பிகளையும் உண்ணுகிறது.

இதேபோன்று இன்னொரு ஒற்றுமை ஒருவகைக் குருவியானது கொடிய விலங்காகிய முதலைக்கு உதவியாக இருக்கின்றன வென்றால் பாருங்களேன்!

முதலை நித்திரை செய்யும்போது வாயைத்திறந்து வைத்துக்கொண்டு தான் நித்திரை செய்யும்! அப்போது இக்குருவிகள் முதலையின் வாயினுள் புகுந்து முதலையின் பற்களுக்கிடையே தங்கியுள்ள இறைச்சியைத் தான் உண்ணுகிறது. இதனால் முதலையின் வாய் சுத்தம் செய்யப்படுவதுடன் குருவிக்கு உணவும் கிடைக்கிறது! இச் செய்கையின் போது முதலை அக்குருவிகளைக் கடித்து தின்றுவிடலாம் ஆனால் அவை அப்படி செய்வதில்லை.

இப்போது பார்த்தீர்களா பறவைகளும் மிருகங்களும் எவ்வளவு ஒற்றுமையாகச் சீவிக்கின்றன என்று? எனவே மாணவ மணிகளே நாமும் ஒற்றுமையாக இருந்து ஒருவருக்கு ஒருவர் நன்மையாக இருப்போம்.

**மாணவ மணிகளே!**

இது உங்கள் பக்கம். உங்களின் கல்வி அறிவையும், எழுத்தார்வத்தையும் வளர்க்கும் பொருட்டு உருவாக்கப்பட்டது. தொடர்ந்து வரும் 'கண்மணி'யில் உங்களுக்கு மேலும்பல புதிய சுவையான அம்சங்களை அள்ளித் தருகிறேன்! கண்மணிக்கு உங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம்.

## ஊரும் பேரும்...

- ☐ இது இருப்பதனால்தானோ நம்நாடு ஓங்கி நிற்கிறது —இலங்'கை'
- ☐ இவ்வூரைக் கேட்டால் நித்திரை வந்துவிடுமோ? —கோப்'பாய்'
- ☐ இங்கு அத்தனை பெரிய இரவா? —ஆனை'இரவு'
- ☐ பாதுகாப்பான ஊர் —'காவலூர்'
- ☐ மதிப்புள்ள மலை —'திரு'கோணமலை
- ☐ இங்கு ஒருவரும் சீவிப்பதில்லையோ —'காலி'
- ☐ புனிதமான ஊர்... —'கோவிலூர்'

---

ஆசிரியர்: வசந்தன்! உப்பிட்டாரை, உள்ளம் வரை நினைக்கும்' என்பதற்கு ஒரு உதாரணம் கூறுபார்க்கலாம்?

வசந்தன்; கருவா!...

ஆசிரியர்: ?...?...

---

சிவா: டேய் அவன் சுத்த'பொலிடோலன்'!

ராஜன்: 'பொலி டோலனா?...

சிவா: ஆம்! சுத்த நஞ்சன்!

---

ஒருவர்: அவன் சரியான சந்தேகப் பேர்வழி!

மற்: ஏன்?...

ஒரு: அவர் தினமும் தனது கையைக்காட்டி நான் உயிருடன் இருக்கிறேனா? என சாத்திரம் கேட்ப்பான்!

---

**மணிமொழி**

கல்லாமை: கற்காமல் இருப்பதைவிடப் பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமையே தீவினையின் மூலவேர்.

—ப்ளேட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லுங்கள் கேட்கிறோம்

● தமிழகத்தின் இதழ்களை (ஒன்றிரண்டைத் தவிர) கண்டு வெறுப்பொன்றே மிஞ்சிய எனக்கு ஈழத்துச் சிரித்திரன் இதழ் மிகுந்த மனநிறவைத் தந்தது. 'தந்திச் சேவகன் வந்தான்' என்ற சிறுகதை படித்தேன் காலச்சூழலை ஒட்டியகரு, தெளிவான இனிமையான எளிமையான நடை, சிறுகதை இலக்கியத்தை கச்சிதமாகக் கையாண்டவிதமே சிறப்பு. புதுப்பணத்தின் கொழுப்பு அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் கலையம்சம் மிளிரும் நல்லகதை இது. எங்கள் நாட்டு வியாபாரக் கதைகளை ஈழத்து இலக்கியங்கள் ஏறிமிதித்து விடுகின்றன.

**கொ. மா. கோதண்டம்**
சாத்தனூர் இல்லம்
22 இராமசாமி கோவில் தெரு
இராஜ பாளையம் 626117
தமிழ்நாடு.

● சிரித்திரன் பார்த்தேன் தந்திச் சேவகன் வந்தான் கதை நல்ல யதார்த்தப் படைப்பு. செல்லாயியும் ராஜமும் நன்றாக உருவாக்கப்பட்ட பாத்திரங்கள் பணம் வந்தால் பத்தும் பறந்துவிடும் என்ற பழமொழி கதையில் தொனிக்கிறது.

**க. ச. பலராமன்**
207 மாப்பிள்ளை
சுப்பராஜா வீதி
ராஜபாளையம் - 626117
தமிழ்நாடு.

□ ''சென்ற இதழில் தவில் மேதை தெட்சணாமூர்த்தியைப் பற்றி எழுதியிருந்த விஷயம் மெய்சிலிர்க்க வைத்தது. —ஆர். ரகுராமன்
வண்ணார்பண்ணை

□ 'சரித்திரம் சிரிக்கிறது உண்மைதான் ஆனல் திக்கவயின் எழுத்து சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது.'

க. சுகுணசபேசன்
வேலணை

□ 'ராகமாளிகை' சுவையான பகுதி விக்ரர் அன்சன்ஸ் பற்றி எழுதியிருந்கது மனதிற்கு நிறைவாக இருந்தது நம் கலைஞர்களை நன்குகௌரவித்துள்ள அவருக்கு எமது நன்றிகள்,''

—ஞானகுணசீலன்
கிளிநொச்சி

□ அகளங்கன் எழுதும் இலக்கியப் பகுதிகள் வெகுஜோர். குட்டிக்கதைகள், கதைத்தேன் அனைத்தும் நன்றாக இருக்கின்றன. சிரித்திரனின் பக்கங்களைக்கூட்டினலென்ன

—அருட். சோமேஸ்வரி
அளவெட்டி வடக்கு


□ மெயில்வாகனத்தார் இடைக்கிடை மாயமாகி விடுகிறாரே கதைகளுக்கான 'ரமணியின் ஓவியங்கள் பிரமாதம் தொடர்ந்து சற்றுப் பெரிதாகப் போடுங்களேன்.

M. M. அஸ்வத்
மன்னார்

□ என்னப்பா உடம்பு கெட்டுப் போச்சு... ரத்ததானம் செய்யட்டுமா?

மண்ணெண்ணை தானம்செய்தால் புண்ணியம். மண்ணெண்ணை இல்லாமல் வீட்டில் சமையலே இல்லை.

## க
## வி
## தை



விதைக்குள் தவமிருக்கும்
உயிர் வித்தே - தரைக்குள்ளே
புதைத்துன்னை மூடிவிட்டார்
இனிப் புதுவாழ்வைச் சாதிப்பாய்
—தமிழன்பன்

## பிறந்தநின வாழ்த்து



அச்சுவேலியைச் சேர்ந்த - எழுத்தாளரும் இலக்கிய நண்பருமான ஜெகேந்திரபோஸ் — தேவராணீ தம்பதிகளின் புதல்வன் இராஜேந்திரா தனது முதலாவது பிறந்தநாளை 2-8-1979 அன்று கொண்டாடினர்.

தாயும், தாய்நாடும் பெருமைப்படும் வண்ணம் சான்றோனாக இராஜேந்திரா துலங்க சிரித்திரனும் வாழ்த்துகிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்: கடன்காரன் வருகிறன் ஒழிக்க வேண்டாம் அப்பா

தந்தை: ஏன்? மகனே!

மகன்: உங்களுக்கு இருமல் இருக்கிறது.

---

ஒரு: என் மகனின் கல்யாணப் பேச்சுக்களால் தபால்காரனுக்கும் அதிகவேலே.

மற்: அப்படி என்ன?

ஒரு: மொட்டைக் கடிதங்கள் தினம், தினம் வருகின்றன.

---

நிருபர்: உங்கள் படம் தோல்வியைத் தழுவியதிற்குக்காரணம் என்ன?

தயாரிப்பாளர்; அதிகமாக ஒழுக்கத்தை வற்புறுத்தியது தான் காரணம்.

---

ஒரு: சிரித்துவிளையாட ஒருபிள்ளை இல்லேயே என்று கவலேப்படுகிறேன்.

மற்; விதி உங்களுடன் சிரித்து விளையாடுகிறது போதாதா.

---

தயாரிப்பாளர்: இனி என் படங்களில் மிருகங்கள்தான் நடிக்கும்.

மற்: அதுதான் நல்லது பயத்தில் ஒழுக்கக் குறைவாக நடிக்காதுகள்.

---

ஒரு: Hospital லுக்குப் பதில் Gaspital என்கிறீர்கள்.

மற்: அங்கு வேலே செய்பவர்கள் Gas மாதிரித்தானே சீறிச் சினக்கிறுர்கள்,

—பேசரி

# சிரித்திரு

ஒரு: எப்படிக் குடும்ப வாழ்க்கை போகுது.

மற்: பற்றற்ற நிலேயில் வாழ்கிறேம். மண்ணெண்ணேயில்லாமல் அடுப்புப் பற்றுவதில்லே. சமைத்துப் போடாததால் மனேவிமேல் பற்றுதல் இல்லே.

□ □

ஒரு: பட்டினத்தார் வாழைமடலில் படுத்திக் கொள்ளி வைத்துவிட்டு "யானுமிட்ட தீ மூழ்க மூழ்க என்றுபாடத் தீ பற்றி எரிந்தது. நான் என்ன பட்டினத்தாரா... மண்ணெண்ணேயும் வாங்க வசதியில்லே... ஆண்டவா... நீதான் காப்பாற்று.

□ □

திருமண அழைப்பிதழ் ஒன்றில் கீழ்க்கண்ட வாசகம் இடம்பெற்றது;

உறவினர்கள் நண்பர்களுக்கு ஓர்பணிவான வேண்டுகோள்.

"எமக்குத் தரும் கல்யாண அன்பளிப்பை பணமாகவோ அல்லது பொருளாகவோ தராது மண்ணெண்ணேயாகத் தந்து ஆசிர்வதித்தால் நன்று.

மணமகள், மணமகன்

□ எங்கப்பா ஓடுகிருய்! என்ன நடந்தது.

★ வீட்டில் களவு போய்விட்டது. பொலிஸ் ஸ்டேஷன் போறேன்

□ நகைநட்டு எல்லாம் போய் விட்டதா?

□ காப்போத்தல்மண்ணெண்ணே களவு போய்விட்டது.

★ ★

□ மனேவியை விவாகரத்துச் செய்திட்டேன்.

★ ஏன் செலவுகாரியா?

□ ஓம்... மண்ணெண்ணேயைக் கண்மூடிக்கொண்டு செலவு செய்கிருள்.

□ □

□ மகனுக்கு உத்தியோகமெடுத்துத் தாறனென்றவருக்கு என்ன கொடுக்கலாம். மாம்பழ சீசனும் முடிந்தது.

★ ஒருகலன் பெற்றேல் கொண்டுபோய் கொடு.

★ ★

□ மீளமுடியாத கஷ்டத்தை ஏற்படுத்தியிட்டுத்தற்கொலே செய்திட்டான்.

★ ஏன் கடன் வைத்திட்டுப் போய்விட்டானே!

□ இருந்த மண் எண்ணே எல்லாவற்றையும் ஊற்றி பற்ற வைத்து இறந்திட்டான்.

★ ★

---

போட்டிக் கதைகள் பற்றிய

## உங்கள் விமர்சனங்கள்.

வாசக அன்பர்களே...

- சென்ற இதழைத் தொடர்ந்து இவ்விதழிலும் போட்டிக்கதைகள் இரண்டு பிரசுரமாகின்றன.
- உங்கள் விமர்சனங்களே தாமதமின்றி அனுப்புங்கள்
- சென்ற இதழில் வெளியான காலங்கள் காத்திருப்பதில்லே, என்ற சிறுகதை ஏற்கெனவே வேறுபோட்டியில் பரிசு பெற்றதாக அறியப்பட்டதால் அதுபற்றி விமர்சிக்க வேண்டியதில்லே.
- அடுத்தஇதழிலும் போட்டிக்கதைகள் பிரசுரமாகும்
- உங்கள் விமர்சனங்களிலிருந்தே பரிசுக்குரிய கதைகள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன். சிறந்த விமர்சனத்திற்கும் பரிசு உண்டு.

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோரம்யம்

மேகலை

மனிதன் தன்மனச் சாட்சிக்குக் கொடுக்கும் மதிப்பே தெய்வத்திற்கு கொடுக்கும் மதிப்பு.

மனோதர்மத்திற்கு கொடுக்கும் கௌரவமே அவனுக்கு கிடைக்கும் கௌரவத்தின் மூலச்சுடர்.

தெய்வத்தை நம்புகிறாரோ இல்லையோ. அதுவேறு விஷயம்—

ஆனால், தன்னை மீறிய சக்திகளை அவன் தரிசிக்கும் போது அவன் தலை குனியவே வேண்டியுள்ளது.

நம்பிக்கை யற்றவனுக்குத்தான் இந்தநிலை—

ஆனால் நம்பிக்கையுள்ளவனுக்கு...

அதுவும் அவன் ஓர் கலைஞனாக இருந்துவிட்டால்...

—அது ஓர் ரம்மியமான விஷயம்.

000000000

உலகப் புகழ்பெற்ற ஹாலிவூட் நடிகர் சார்ல்ரன் ஹெஸ்டன் யாவரும் அறிவர்.

—இல்லாவிட்டால் இப்பொழுது மீண்டும் திரையிடப் பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் பத்துக்கட்டளைகள் (The Ten Commandments) படத்தில் 'மோஸஸை' நினைத்துக்கொள்ளுங்கள்.

—அந்த அற்புத நடிகர் உங்கள்முன் வந்துவிடுவார்.

கிறீஸ்தவமத தூதர்களில் ஒருவரான மோஸஸின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இணையற்ற அப்பக்திக்காவியத்தில் அவர் நடித்துமுடிக்கும் வரையில் மாமிசம் உண்ணவில்லை...

ஆசாரசீலராக, நடித்து அந்தப் பாத்திரத்திற்கே ஜீவனளித்தார்.

அந்த ஆசாரத்தின் தூய்மையே 'அவரை' மோஸஸாகவே நிலைக்கவைத்து கௌரவத்தை ஏற்படுத்திய ஆதாரசுருதி

—o—oo

திருவருட் செல்வர் 'அப்பரை' யாரால் மறக்கமுடியும். எண்பது வயது ஞானப்பிழம்பான நாவுக்கரசரை தேவாரம் பாடிய தெய்வத்தமிழ்க் குரவரை மீண்டும் நம் கண்முன்னே நடமாடவைத்து மெய்சிலிர்க்க வைத்தவர் நமது நடிகர்திலகம்.

அப்பராக நடித்து முடிக்கும் வரையில் அவர் கடைப் பிடித்த விரதமும் மிகவும் கடுமையானது.

அதிகம் பேசாது, மௌனமாய், ஒருநேர உணவுடன் அவர் நடித்ததைப் பார்த்தபோது கையெடுத்து வணங்கவேண்டும் போலிருந்தது என்று அருட்செல்வர் A. P. நாகராஜனே சொல்லியிருக்கிறார்.

அந்த உணர்வு தான்.

நடிகர் திலகத்தின் பெருமைக்கும் கௌரவத்திற்கும் ஜீவஊற்று.

நினைக்கவே மனத்திற்கு ரம்மியமாக இருக்கிறதல்லவா


**Don't Read**

**உங்கள் தேவைகள் எதுவானாலென்ன?**

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

**யாழ்நகரில் சகலவிதமான**

**சாய்ப்புச் சாமான்களுக்கும்**

**மலிவாகவும் உத்தரவாதத்துடனும்**

**கிடைக்கும் ஒரே இடம்**

## ரஜூ ஸ்ரோர்ஸ்

**67, 69, கஸ்தூரியார் வீதி**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 372 தந்தி: "ரஜூ"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரு

● எரிபொருள் விலைகூடி விட்டதால் ஞாயிற்றுக் கிழமைகளில் வாகனங்கள் ஓடப்படாது என்பதுபோல் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் சிகரட் குடிப்பதையும் நிறுத்திவிட்டேன்.

□ ஏன் அப்படி?

● அதுவும் எரிகிற பொருள் தானே.

● குடிபோதையில் காரைச் செலுத்தி பாதசாரிக்குக் காயம் விளைவித்திருக்கிறதாக உம்மீது குற்றம் ருசுவாகியிருக்கிறது.

□ ஐயோ நான் குடிக்கவேஇல்லை இப்போ பெட்ரோல் தட்டுப்பாட்டால் காருக்கு மதுசாரம் கொடுத்தேன், அது தான்.

● என்ன கவலையாக இருக்கிறீர்கள்?

□ பெட்ரோல் விலையேற்றத்துக்குப் பிறகு பஸ்ஸில் யாரோ காலிப்பயல் எனது மணிபர்சைப் பணத்தோடு வைத்துவிட்டு சிகரட் லைட்டரை திருடி விட்டான்.

நடன ஆசிரியர்: உங்கள் மகளுக்கு நடனம் நன்றாகப் பழக்கிவிட்டேன். முத்திரைகள் நன்றாகப் பிடித்து ஆடுகிறாள்.

தாயார்: அதுசரி. இந்த உணவு முத்திரை எப்படிப் பிடிக்கிறது என்றும் சொல்லிக் கொடுங்கள்.

● அமெரிக்கர்கள் இறக்காதவர்கள் என்று இப்போதான் தெரிந்தது.

□ ஏன் அவர்கட்கு மட்டும் மரணமே வராதா?

● அட நீ ஒண்ணு, ஸ்கைலாப்பை மேலே அனுப்பிவிட்டு இறக்காதவர்களாக கஷ்டப்படவில்லையா?

நிருபர்: நெருப்பு வளையங்களினூடாக பாய்ந்து வித்தை காட்டுகிறீர்களே எப்படிப் பழகினீர்கள்?

வித்தைக்காரர்: மெயில் ரயிலில் ஜன்னலுக் கூடாகப் பாய்ந்து இடம்பிடித்த பழக்கம்தான்.

□ உணவு முத்திரை கூட்டுறவுக் கடைகளில் மட்டும்தானா கொடுக்கிறார்கள்? தபாற்கந்தோர்களிலும் கொடுக்கிறார்கள்.

● எப்படி?

□ அங்குவாங்கும் முத்திரைகளை உடனே வாய்க்குள் தானே வைக்கிறோம்.

பெண் நாய்; என்ன சந்தோஷமாக இருக்கிறீர்கள்?

ஆண் நாய்: லைசன்ஸ் இல்லாத நாய்களைப் பிடிக்கும் வேலைக்கு இதுவரை எவரும் முன்வரவில்லையாம்.

**பரமண்ணா பகருகிறார்.**

பஸ் சாரதிகளின் வரவு இப்போ திருப்திகரமாக இருக்கிறது.

—செய்தி

அதுகிடக்கட்டும். பஸ்களின் வரவும் திருப்தியாக இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்?

மனைவி; நீ செத்த அன்றைக்கு மஞ்சள் பூசி குளித்துநைலக்ஸ் உடுத்திப் படம் பார்க்கப் போவேன்.

கணவன்: (வெறியில்) நான் செத்துச் சுடுகாட்டுக்குப் போகும்போது ஹெலிகொப்டர் எனக்கு மலர்தூவ நான் அதைப் பார்த்து ரசித்தபடி போவேன்.

காரியாலய சிப்பந்தி ஒருவர் தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கேள்விப்பட்டதும் நிருபர் ஒருவர் அவரைப் பேட்டிகாணும் போது கேட்டகேள்வி. நீங்கள் தேர்தலில் போட்டியிட்டால் எதைச் சின்னமாகத் தெரிவுசெய்வீர்கள். சிப்பந்தி அளித்தபதில் சுவர்க் கடிகாரம். அதுதான் எங்களுக்கு உதவுகிறது.

தாயார்: நாளைக்கு நம்ம வீட்டிலே நடக்கப் போகிற கலியாணத்துக்கு பத்துருத்தல் வெங்காயம் உரிக்கவேணும் எப்படி உரிக்கிறது. கண் எரிஞ்சு வீங்கிவிடும்.

பையன்; எங்க வாத்தியார் கிட்டே கொடுத்துவிடு, எப்பவும் தோலை உரிச்சிடுவேன் என்கிறார்.

● ஞாயிற்றுக்கிழமைகளில் இப்போதான் வீட்டில் நிம்மதியாக இருக்கமுடிகிறது.

□ ஏன் அப்படி?

● வீட்டிலே உள்ள பசங்களையெல்லாம் காலை ஒன்பது முதல் இரண்டு மணிவரை ரோட்டிலே விளையாடச் சொல்லி விரட்டிவிடுவேன்.

ச. ரா. பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு அழகான வீடு

● தாமரைச் செல்வி

முன்னே பெரிதான விசாலமான போர்ட்டிகோ (குறைந்த பட்சம் ஒன்பது ஸ்ரீ கார் தாராளமாய் நிற்கக் கூடியதாக...) ஆறு படிகள் ஏறியதும் பரந்த ஹால் (யாழ்ப்பாணம் புதிய சந்தைக் கட்டடத்தில் விற்கப்படும் அத்தனை வெளிநாட்டு பொருட்களையும் கொண்டு வந்து அலங்கரிக்கக் கூடியதாக...) ஹாலுக்குள்ளே வட்டமாய் வளைந்து போகும் மாடிப்படிகள்... (சிவப்பு கம்பளம் விரிக்கலாம்...) கீழே இரண்டு படுக்கையறை அடுக்களை... டைனிங்ஹால்... மேலே இரண்டு படுக்கையறைகள், பாத்ரூம், முன் பக்கம் போர்டிகோவிற்கு மேலே பரந்த பல்கனி... (மழை நேரங்களில் நின்றால் சாரல் அடிக்கும்) முழு அளவு கண்ணாடி ஜன்னல்கள்... இத்தியாதி அமைப்புக்களுடன் ஒரு அழகான வீடு தயாராகி விட்டது.

அவன் கைகளை உதறி விட்டுக்கொண்டு தான் வரைந்திருந்த வீட்டின் மாதிரி அமைப்புப் படத்தைப் பார்த்தான்.

அணுவும் பிசகாது சரியான அளவுகளுடன் ஒவ்வொரு கோடுகளையும் வரைந்திருந்தான். அவன் அரசாங்க உத்தியோகத்தவனாக இருந்தாலும் அவ்வப்போது வரைந்து கொடுத்து ஐம்பது, எண்பது என்று வாங்கிக் கொள்வான், தான் வரைந்த கோடுகளின் சுத்தத்தையும் வீட்டின் அமைப்பையும் பார்த்து தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான்.

இந்த அமைப்பு நிஜமாகவே ஒரு வீடாக மாறும் போது எத்தனை அழகாக இருக்கும்—

கிழவரின் செருமல் ஓசையில் அவன் நிமிர்கிறான். ''ஓ! வந்திட்டீங்களா...'' என்றவன் அவருக்காக தான் வரைந்திருந்த வீட்டின் அமைப்பை விளக்குகிறான்.

அவர் பிரமிப்புடன் கேட்டுவிட்டு (இல்லாத) தலை மயிரை வரட் வரட் என்று சொறிந்தார்.

அவர் எங்கே இந்த 'பிளானை' வேண்டாம் என்று சொல்லி விடுவாரோ என்ற பயத்தில் அவன் தூண்டுகிறான்.

''சேர்! இப்பிடி ஒரு வீட்டில் குடியிருக்க குடுத்து வைச்சிருக்க வேணும். இருந்தால் இப்பிடி ஒரு வீட்டில் தான் இருக்க வேணும். நான் எத்தனையோ பேருக்கு பிளான் கீறிக் குடுத்திருக்கிறன், நீங்கள் என்னவென்றால்...''

அவன் சொல்லச்சொல்ல அவரது கண்கள் ஆர்வத்துடன் விரிந்தன. ஆசையுடன் கேட்டுக்கொண்டிருந்தார். கடைசியில்...

''அதுக்கில்லை தம்பி...''

மறுபடியும் வரட் வரட் என்று சொறிந்தார்,

'இப்பிடி ஒரு வீடு கட்டிமுடிக்க எவ்வளவு காசுவேணும்' தயங்கித் தயங்கிக் கேட்டார்.

அவன் பென்சிலால் மேஜையைத் தட்டிக்கொண்டே ''கனக்கத் தேவை இல்லைசேர் ஒருலட்சத்திச் சொச்சம் போதும்...'' என்றான். ஆ'வென்ற கிழவர் அப்படியே சரிந்து கதிரையில் விழுந்து விட்டார். அவன் பதறிப் போய் ''சேர் சேர்'' என்று அவரை உலுப்பினான், கிழவர் அசட்டுச் சிரிப்புடன் சமாளித்தார்.

''தம்பி என்னைக் குடிமுழுக வைக்கப் பார்க்கிறீர் எனக்கு நாலு பெட்டையள் மூத்தவளுக்கு வீடுகட்டத் தான் பிளான் கேட்டு வந்தனான். ஒரு சாதாரண பிளான் தாரும் போதும்'' என்றார்.

சாதாரண பிளான் கீறுவதற்கு ஆள் நான்இல்லை என்று அலட்சியத்தோடு அவன் நிமிர்ந்தாலும் வாய் என்னமோ 'நாளைக்கு வாங்கோ' என்று சொல்லி வைத்தது. வயிற்றுக்கும் வாய்க்கும் நிறைய தொடர்பு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பது ரூபாய் வருமானத்தை இழக்க மனம் விரும்ப வில்லை.

திரும்பவும் ஒருதடவை அந்த பிளானை ஆசையு டன் பார்த்துவிட்டு கிழவர் போய்விட்டார்.

அவனுக்கு சோர்வாக இருந்தது. எவ்வளவு கஷ் டப்பட்டு வரைந்தது.

மத்தியானத்திற்கு மேல் நண்பன் சிவம் ஒருவரை அழைத்து வந்தான். பருமனாக... உயரமாக... முன்னே தள்ளிய வயிறுடன் நாஷனல்... வேட்டியுடன் (நாஷ னலுக்குள் சங்கிலி பளபளத்தது. இருபது பவுண் இருக்குமா...) எட்டு விரலிலும் மோதிரமாக சினிமாக் களில் வருகின்ற பண்ணையார் போல இருந்தார். சிவம் சொன்னான்,

'இவர் யாழ்ப்பாணத்து ஆள் கொழும்பில பிஸ் னெஸ் செய்யிறார். யாழ்ப்பாணத்தில ஒரு வீடுகட்டப் போகிறாராம். நீதான் பெரி...ய பிளான் போடுவியே... ஒரு 'பிளான்' குடடா.''

சட்டென்று ஒருசந்தோஷம் அவனைத் தொற்றிக்கொண் டது.

'இருங்கோ சேர்' என்றவன் மேஜையில் இருந்த அதே பிளானை எடுத்து விபரிக்க ஆரம்பித்தான்.

அமைப்புக்களையும் அளவுகளையும் சொல்லிவிட்டு—

''மனிதனாய் பிறந்தால் இப்பிடி ஒரு வீட்டில் இருக்க வேணும். உங்களுக்கு பிடிச்சிருக்கா சேர்—' என்று முடித்தான்.

அவர் சிரித்தார்.

மஞ்சளான பற்கள் அசிங்கமாய் தெரிந்தது. சிரிக்கா மல் இருந்திருக்கலாம்,

நல்லாப் பிடிச்சுது. இப்பிடி ஒரு வீடு கட்டவேணும் எண்டுதான் நினைச்சனான்'' என்றார். பேசும்போது சென்ற் மணத்தது.

அவன் உற்சாகமாக நின்றான்.

''உங்களிட்டை கார் இருக்குதா...?' கேட்டான் அவன்

ரெண்டு கார் இருக்குது—''

''அப்ப இந்தப்பக்கம் ஷெட் போட பிளானில கீறி விடட்டுமா?''

''ஓம் நல்ல யோசனை தம்பி. எனக்கு வீடு நல்லாப் பிடிச்சிருக்குது. நாளைக்கு பிளானை எடுத்துக்கொண்டு போகவாறன். இந்தாரும், உமக்குரிய காசு...''

அவர் தாராளமாக சிரித்துக்கொண்டு — இப்போது பற் கள் அசிங்கமாக தெரியவில்லை — அவனிடம் நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தார். [போய்விட்டார்.

அவன் தொடர்ந்து உற்சாகமாக ஷெட் போட்டான்.

இனிமேல் கீறும் பிளான்களுக்கு முதலிலேயே ஷெட் போட்டு விடவேண்டும்.

மாலை,

அவன் அலுவலகம் முடிந்து பஸ்ஸில் நெரிந்து கோண் டாவில் சந்தியில் இறங்கி ஒழுங்கையில் கல் இடற நடந்து வீடுவந்து சேர்ந்தான்.

கஷ்டப்பட்டு முகத்தை மலர்த்தி வைத்துக்கொண்டு வாசலில் நிற்கும் மனைவியைக் காணேம்.

குறுகலான விறுந்தையில் ஏறி உள்ளே பார்த்தான் சின்ன சதுர ஹால் அலங்கோலமாய் இருந்தது.

அவனது புத்திர செல்வங்கள் தாறுமாறாக பொருட்க ளைப் போட்டிருந்தார்கள். பழைய வானெலிப்பெட்டி கொர் கொர் என்று செய்தி வாசித்தது.

மரப் பலகைகளால் பக்கத்தே அமைந்திருந்த அடுக்க ளைக்குள்ளிருந்து மனைவி வந்தாள்.

இதென்ன வீடா இல்லை தெருவா... தரித்திரம் பிடிச் சதுகள்... ஏன் எல்லாத்தையும் இதுக்குள்ளே போட் டிருக்கிறாய்... ஒழுங்காய் வைக்கக் கூடாதே...

அவனுக்கு வந்த கோபத்தில் கத்திக்கொண்டே நுழைந் தான்.

நுழைந்தவனின் நெற்றியில் பட்டென்று அடித்தது நிலைப்படி,

விண்ணெண்கிறது.

''இதென்ன மாடமாளிகை எண்ட நினைப்பே—தலையை நிமிர்த்திக்கொண்டு வாறீங்கள். கொஞ்சம் பார்த்து குனிஞ்சு வாறதுக்கென்ன—''

ஏளனம் தெரிய மெலிதாய் ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு அவள் உள்ளே போனாள்,

போர்ட்டிகோ... பரந்தஹால்... மாடிப்படிகள்... அறை கள்... பாத்ரூம்... பல்கனி... எல்லாம் கண் சிமிட்டியது, அவன் நெற்றியைத் தடவிக்கொண்டு நின்றான்.

## கைகுலுக்குதல்

பழங்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் தெருக்களுக்கு வெளிச்சம் இருக்கவில்லை. கள் வர் இருண்ட தெருவோரங்களில் பதுங்கி யிருந்தார்கள். ஆகவே வழிப்போக்கர் தம் மைப் பாதுகாக்கும் பொருட்டு வாள் கொண்டு சென்றனர். இரண்டுபேர் சந் தித்த போது தம்மிடம் ஆயுதமில்லையென் றும் தாம் நண்பர்கள் என்றும் அறிவிப்ப தற்காக அவர்கள் ஆயுதம் பிடிக்கும் கைகளை நீட்டினர். ஒருவர் மற்றவர் கையைப்பிடித்து அவரிடம் ஆயுதமில்லை யென்றும் அவரால் ஆபத்து நேராதென்றும் அறிந்தனர்.

இக்காலத்தில் ஒருவர் மற்றவரின் கை யைப் பிடித்தல் நட்பின் அடையாளம் என் றும் உபசரிக்கும் வழக்கம் என்று கொள்ளப் படுகிறது.

ஆதாரம்: 'உங்களுக்குத் தெரியுமா' என்ற புத்தகத்திலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மில்க்வைற் நீலசோப்




திருப்தி கரமான சலவைக்கு
**மில்க்வைற் நீலசோப் வாங்கி**
உபயோகியுங்கள்

100 மில்க்வைற் நீலசோப்
மேலுறைகளை அனுப்பி

**மில்க்வைற் அப்பியாசக் கொப்பியை**
அல்லது

அழகிய பொலித்தீன் பாக்கை
பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் யாழ்ப்பாணம்

தொலைபேசி; 7233

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 36063



அதிக சுவைக்கு அண்ணா கோப்பியே!
அண்ணா கோப்பிக்கு நிகர்!
அண்ணா கோப்பியே!!

## அண்ணா கோப்பி
## தொழிலகம்

இணுவில். தொலைபேசி: 7412



அழகுக் கலைக்கோலம் தரும்
அற்புதப் புடவைத் தினிசுகளுக்கு

ஒப்பற்ற இடம்.
**சிங்காரம்ஸ்**

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு

## டைமா நகைமாளிகை

செட்டியார் தெரு,
கொழும்பு.

தொலைபேசி: 20875.



## சிற்றி பேணிச்சர்

- கலைத்துவமான
- நிலையான உறுதிமிக்க
- விலையில் நேர்த்தியான

கவினுறு தளபாடங்களின்
மனங்கவர் தேர்வுக்கு

உங்கள் இல்லம்
பளிங்கு மாளிகையாகத் திகழ

உங்கள் தேவைகளை
திருப்தியுடன் பெற...

## சிற்றி பேணிச்சர்

- கஸ்தூரியார் வீதி
- யாழ்ப்பாணம்



## மல்லிகை

ஈழத்தின் இனிய
இலக்கிய இதழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அகளங்கன்**

தமிழரிடையே காணப்படும்பெருங்குறைபாடுகளில் ஒன்று தமது இலக்கியங்களில் காணப்படும் தத்துவங்களை வாழ்க்கை நெறிகளை அறியாது, அறியமுயலாது வெளிநாட்டு இலக்கியங்களில் உள்ள சிறப்புக்களையே பெரிது படுத்திப் பேசுவதும், உதாரணங் காட்டுவதுமாகும்.

தமிழ் இலக்கியத்தில் இல்லாத ஒன்றை வேற்றுமொழி இலக்கியத்திலிருந்து கையாள்வதை நாம்வரவேற்க வேண்டியது கடமை. ஆனால் அதேவேளை எமது இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளவற்றை எமது இலக்கியங்களில் செய்யப்பட்டுள்ளவற்றை. எமது இலக்கியங்களுக்குப் பின்னெழுந்த வேற்றுமொழி இலக்கியங்கள் கூறியிருந்தாலும், வேற்றுமொழிக் கவிஞரின் பெயரையும் அந்த இலக்கியத்தின் பெயரையும் பாராட்டி விடயத்தை எடுத்துக் கூறிப்பெரிது படுத்தி விடுவது எமது இலக்கியத்தையும் எமது புலவர்களையும் அவமதிக்கும் ஒரு செயலாகும்.

உதாரணமாக, ''நாடகமே உலகம்'' என்று தூக்கிப் பிடிக்கிறோம், இதே கருத்தை சேக்ஸ்பியருக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்வாழ்ந்த சங்ககாலப் புலவர் ஒருவர் கூறியிருக்கிறார்.

சிறுமனை வாழ்க்கையி னொரீஇ வருநர்க்
குதவியாற்று நண்பிற் பண்புடை
ஊழிற் றாகநின் செய்கை விழவிற்
கோடியர் நீர்மைபோல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புற னாகநின் சுற்றம்
இசைப்புற னாகநீ
யோம்பிய பொருளே.

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முது கண்ணன் சாத்தனார் பாடும்போது விழாவிலே நடைபெறும் நாடகத்தில் ''முறைமுறை ஆடுநர் வந்து போவதுபோலக் கழியும் இவ்வுலகம்'' என்று பாடுகிறார்.

புறநானூற்றிலே இப்பாடல் இடம்பெறுகிறது. இப்படிப்பலவற்றை நாம், எமது இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டுவதானால் எமது இலக்கியம் உலக அரங்கில் பெரும் செல்வாக்கைப் பெறமுடியாதிருக்கிறது.

பெரியோர்களும், தமிழ் அறிஞர்களும் தம்மை வேற்றுமொழி படித்தவன் என்று காட்டிக்கொள்ள முயற்சித்துச் செய்யும் இத்தகைய செய்கையால் தனி மனிதன் வாழ தமிழ்மொழி அழிகிறது. இனிமேலாவது தமிழ் இலக்கியங்களிலுள்ள உயர்ந்த கருத்துக்களை வெளிக்கொணர்ந்து தெருவெல்லாம் மட்டுமல்ல தேசமெங்கும் தமிழ் ஒலிக்கச் செய்ய தமிழர்களாகிய நாம் முயல்வோம்.

---

# பஞ்சை!

**க. கலாமோகன்**

மெலிந்து சுருங்கி வதங்கிய உடலும்
மேதினி தனிலவர் நடைச் சடலம்
உலர்ந்த உதடுகள் ஒட்டிய வயிறு
உற்றுநீ நோக்கினால் மெல்லிய கயிறு
அலைந்து சருகெனத் தேய்ந்த கால்கள்
அடிக்கடி குத்துமாம் இடுக்கண் வேல்கள்
நலிந்து பஞ்செனப் பறந்திடு வார்கள்
இவர்களேபஞ்சை எனப்படு வோர்கள்.

தேவைக்கு மீறியே ஒருசாரார் தேட
தோற்றப் பட்டனர் துயரினில் விட
சேவைகள் செகத்திற்கு தந்தனர் நன்கு
சீறிடும் பசியினால் அழுகிறார் இன்று
சிந்தினர் உதிரத்தை வியர்வையாய் ஆக்கி
சிறந்தனர் சில்லோர் அதனைச் சுரண்டி
இந்திர நிலைதனில் இருந்திடத் தக்கோர்
இகத்தினில் இப்படி இடர்ப்படல் நன்றோ.

# வாய்வண்ணமும் கால்வண்ணமும்

ரஷ்ய நாவலாசிரியர் தித்தோவ் அவர்களின் வாழ்க்கை உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கது அவர் சுரங்கத்தில் வேலை செய்யும்போது கால்களையும் இழந்தார். மனதைத் தளர விடாத அவர் வாயினால் பென்சிலைக் கவ்விக் கொண்டு நாவல்கள் எழுதிப் புகழ் அடைந்தார். அவரின் நாவல்கள் லட்சக் கணக்கில் விற்பனை ஆயின.

கோஷ் என்ற இந்திய மாணவன் கைகளை இழந்தவன். அவன் கால்களினால் பரீட்சை எழுதி உயர் வகுப்பில் சித்தியடைந்து உள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் நகைச்சுவை

சே. நா. தர்மராசா

வசைபாடக் காளமேகம்'' எனப்பெரிதும் பாராட்டபட்டவர் காளமேகப் புலவர். சிலேடை பாடுவதில் இவருக்கு இவரே நிகர். ஒரு சொல்லுக்கு பலபொருட்கள் வைத்துச் சொற்சிலம்பமாடும் கவிகாளமேகத்தின் பாடல்கள் படிப்பவர்க்கு இலக்கியச் சுவையை பெரிதும் வழங்குகின்றன. நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கவனித்து இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற கவிபாடிக் கேலிசெய்வது அவரது வழக்கம். அவரது வசைப் பாடல்கள் மனிதர்கள்மேல் மட்டுமன்றி தெய்வங்கள் மேலும் இருக்கும்.

வில்லி புத்தூராழ்வார் பாரதத்தில் துரியோதனனைக் குறிப்பிடும் பொழுது ''வசையே இசையாய்க் கொண்டவன்'' என்றார். மற்றவர்கள் அவனைப்பற்றிப் பேசும் வசைமொழியையே தனக்குப் புகழ்மொழியாகக் கொண்டவன் துரியோதனன். அதேபோல் காளமேகமும் இறைவனுக்குப் புகழ்ச்சியான இசையாகச் சேர்ந்தவர்.

நகைச் சுவையாக கேலிப்பாடல்கள் பலபாடிய இவரது பாடல்களில் இங்கு ஒரு நகைச்சுவைக் கேலிப் பாடலைக் கவனிப்போம். பேருந்து நிலையத்தில் பேருந்துகளைத் தள்ளி தொடக்கும் போதும் எனக்கு காளமேகத்தின் ஆழமான நகைச்சுவைக் கருத்தமைந்த இப்பாடலே ஞாபகத்தில் வரும்.

விகடராமன் என்ற பிராமணனுக்கு ஒரு குதிரை இருந்தது. அந்தக் குதிரையோ நலிந்து மெலிந்து. நடக்க முடியாத நிலையில் இருந்தது. ஆனால் விகடராமனோ குதிரையில்தான் சவாரி செய்வான். ஒருநாள் விகடராமன் குதிரையில் சாவாரி செய்யும்போது காளமேகம் அந்தக் காட்சியைக் கண்டார்.

சவாரி எப்படி நடந்தது தெரியுமா? கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு முன்னால் மூன்றுபேர் குதிரையை இழுத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுதும் குதிரைச் சவாரி சொகுசா இருக்கவில்லை, பின்னே இரண்டுபேர் குதிரையைத் தள்ளிக்கொள்ளும் படியும் செய்தான் விகடராமன், இப்போது சவாரி தொடர்கிறது. குதிரையின் வேகம் என்ன தெரியுமா? ஒரு மாதத்தில் செல்லும் தூரம் காதம்தான். அதாவது பத்துமைல் செல்ல ஒருமாதம் எடுக்குமாம்.

இந்தக் குதிரையை வைத்து பரிவலுவைக் கணித்திருந்தால் மிகவும் நன்றாகவே இருந்திருக்கும்.

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள — எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி.

மாதத்தில் காதவழி போகும் விகடராமனின் சவாரியை காளமேகம் எப்படி நகைச்சுவையாகக் கூறினார் பாருங்கள், விகடராமனை பிராமணன் என்று சொல்வதற்கு அவர் கையாண்ட கவிதை உத்திமிகவும் சிறப்பாக இருக்கிறது. எந்த நேரமும் விகடராமனின் வாயிலிருந்து வேதம் வெளிவந்து போய்க்கொண்டிருக்கிறதாம். சிலர் எப்பொழுதும் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருப்பதைப் போல விகடராமன் மந்திரங்களை முணுமுணுப்பானும். அதுதான் அவனை ''எந்நேரம் வேதம்போம் வாயான்'' என்றார். இது காளமேகம் பொழிந்த நகைச்சுவை மழையில் ஒருதுளி.

● ● ●


பருத்தித்துறையிலே....
நவீன சந்தையிலே
**நவநாகரீக உடைகளுக்கு**
விஜயம் செய்யுங்கள்
**ஜானகி ரெக்ஸ்ரைஸ்ஸ்**
நவீன சந்தை,
பருத்தித்துறை.

பருத்தித்துறையிலே....
**நவீன உடை வகைகளுக்கு**
விஜயம் செய்யுங்கள்
**சரசா ரெக்ஸ்ரைஸ்ஸ்**
யாழ்ப்பாண வீதி,
பருத்தித்துறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசரதனின் உடலை "எம்பாம்" செய்தனர்

"மறையூரர்"

இறந்த ஒருவரது உடலை அவரது மிகநெருங்கிய உறவினர் தூரத்திலிருந்தால் அவர் வரும்வரை பாது காப்பாக வைத்திருக்க இன்றய விஞ்ஞானத்தால் முடியும். உடலைக் கிறிக்கிழித்து பல அலங்கோலங்களுக்குப் பின் சிலநாட்களுக்கு உடலைப் பழுதுபடாது வைத்திருக்கும் முறை இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. Embalm செய்தல் என்று இதனை எல்லோரும் கூறுகிறோம்.

இதனைவிடச் சிறப்பான முறையில் இறந்த உடலை ஒருவகைத் தைலத்தில் இட்டுப் பழுதுபடாது பாது காக்கும் முறை பண்டைக் காலத்திலேயே இருந்திருக்கிறது.

இராமன் கானகஞ் சென்ற செய்திகேட்டுப் புத்திர சோகத்தால் தசரதச் சக்கரவர்த்தி உயிர்துறக்கிறார். பரதனும் சத்துருக்கனும் கேகய நாட்டிற்குச் சென்றிருந்ததால், அவருக்கு ஈமக்கடன் செய்ய பரதனும் சத்துருக்கனும் வரும்வரை அவரது உடலைப் பழுதுபடாது வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. அதனால் அவரது உடலை ஒருவகைத் தைலத்தில் இட்டுப் பாது காத்தனர் என்று இராமாயணம் கூறுகிறது.

பட்டத் தரசியரைத் தவிர தசரதருக்கு அறுபதி னாயிரம் மனைவியர் இருந்தனராம். அதனால் அவரது உடலைச் சூழ்ந்து மனைவியர் அனைவரும் இருந்து அழுகிறார்கள் இதனையும் சேர்ந்து கவிச் சக்கரவர்த்தி கம்பன் இப்படிக் கூறுகிறான்.

"தையற் கடலிற் கிடந்தானைத் தயிலக் கடலின் றலையுய்த்தார்."

அதுவும் ஒருநாள் இருநாள் அல்ல, வான்மீகர் கூறுகிறார் பத்து நாட்கள் அப்படிப் பாதுகாத்தனராம். ஆனால் கம்பரோ ஏழுநாள் என்று கூறுகிறார்.

"மறுவின் மைந்தனே வள்ள லுந்தையா  
ரிறுதி யெய்திநா ளேழி றந்தன  
சிறுவர் செய்கடன் செய்து தீர்த்தியென்  
றுறுதன் மேயினு ளுரையின் மேயினான்"

வசிட்டர் பரதனுக்கு தசரதர் இறந்தது பற்றிச்சொல் லும்போது "உன் தந்தை இறந்து ஏழு நாட்கள் சென்றுவிட்டன" என்று கூறுவதையே மேலேயுள்ள பாடல் விளக்குகிறது.

---

- உங்கள் மனைவி இப்படி ஊதியதற்குக் காரண மென்ன?
- ஊதிய உயர்வு வந்ததே காரணம்?

—நாதன்

# மூன்றடி மண் கேட்டான்

மகாபலிச் சக்கரவர்த்தி யாகஞ் செய்து கொண்டிருக்கும்போது குள்ளப் பிராமண உருவமெடுத்து திருமால் மகாபலியிடம் போய்ச்சேர்ந்தார். தான் தவஞ் செய்வதற்கு தனது காலால் மூன்று அடி மண்வேண்டு மென்று கேட்டார். சக்கரவர்த்தியும் சரியென்றுகூறி உனது காலால் அளந்து எடுத்துக்கொள் என்றுதானஞ் செய்தான். வாமன வடிவமாக வந்துநின்ற திருமால், நெடுமாலாக வளர்ந்தார் ஓரடியால் மண்ணையும் ஓரடியால் விண்ணையும் அளந்து மற்றோர் அடிக்கு இடமின்மையால் மகாபலியின் சிரத்தின்மேல் மூன்றாம் அடியை வைத்து முத்தி கொடுத்தார்.

இது வாமன அவதாரக்கதை. அளவுமுறை பொது வானதாக இல்லாததாலேயே மகாபலிச் சக்கரவர்த்திக்கு கஷ்டம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சியின் பின்தான் பொது வான அளவு முறைகளின் அவசியத்தை மக்கள் உணர்ந்து 'அளவு முறைகள்' தீர்மானிக்கப்பட்டது.

---

# செயல் ஒன்று சூழ்நிலை வேறு

லங்கேசனான ராவணன் கைலைமலையைத் தூக்கினான் அது ஆணவத்தின் காரணமாக, ராமபக்தனான அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கினார், அது அன்பின் காரணமாக. கோவர்தன மலையைக் கிருஷ்ணபகவான் தூக்கினார். அது பசுக்களை, மக்களைக் காப்பாற்றியாக வேண்டுமே என்றகடமை காரணமாக.

---

# என்றும் பதினைந்து

இலங்கையில் பதினைந்து வருடங்களுக்குமேல் விலை உயராத பொருள் ஒன்று உண்டு. அதுதான் வாய்ப்பாடு மட்டை. அன்றும் பதினைந்து சதம்தான். இன்றும் பதினைந்து சதம் தான்.

—யோகன்

---

வியாழன் மாற்றம் கார் வைத்திருப்பவர்கள் அநேகம் பேரைப் பாதித்திருக்கு.  
எப்படி?  
பெற்றோல் விலை உயர்வால் எல்லாரும் பஸ்ஸில் பிரயாணம் செய்கிறார்கள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Two Men in The City

— பிரான்சிய திரைப்படம்

ஜினோ, செய்த குற்றத்துக்காக தண்டனை அனுபவிக்கிறான், பன்னிரண்டு வருடங்களில் பத்து வருடம் முடிந்துவிட்டது, சிறைச்சாலை சீர்திருத்த அதிகாரியின் முயற்சியினால் இடையிலேயே விடுதலையாகின்றான். சீர்திருத்த அதிகாரி ஜேர்மே, சிறைக்கைதிகளில் அனுதாபமும் ஆதரவும் காட்டுபவர் விடுதலையான ஜினோவின் வாழ்க்கை அவனது இளம் மனைவியுடன் மீண்டும் மலர்கிறது. பத்திரிகை அச்சகத்தில் கடும் உழைப்பாளியான அவனை அவனது பழைய நண்பர்கள் தமது திருட்டுகளுக்கு கூட்டாளியாக்க முனைகின்றனர். அவன் அவர்களிடம் இருந்து விடுபட முயற்சிக்கின்றார்கள், இடையில் அவனது மனைவி கார் விபத்தில் இறக்கின்றாள். வங்கியில் கடமைபுரியும் இளம் பெண்ணொடு நட்பேற்படுகிறது, விடுதலையடைந்தாலும் அவன்மீது பொலீசின் கண்காணிப்பு தொடர்கிறது, அவன்மீது அவநம்பிக்கை கொண்ட பொலீஸ் அதிகாரி அவனை விசாரணைக்குட்படுத்துகின்றான். வேறு குற்றங்களுடன் அவனை தொடர்புபடுத்த, முயற்சி எடுக்கப்படுகிறது. இறுதியில் அவன் தன்னை வேவு பார்த்த அந்த பொலீஸ் அதிகாரியையே கொன்றுவிடுகின்றான். மரண தண்டனை கிடைக்கிறது. ஜனாதிபதிக்கு செய்யப்பட்ட கருணை மனு நிராகரிக்கப்பட தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

மனிதப் பெறுமானங்கள் பலவீனப்பட்டுப் போன சூழலும், அங்குபேணப்படும் போலித்தனமான சட்ட, நீதி முறைகளும் ஒருவனை எவ்வாறு குற்றவாளியாக்கிக் குரூரமாகக் கொன்றுவிடுகின்றன என்பது படத்தில் மிக நேர்த்தியாகக் காட்டப் படுகிறது, மரண தண்டனை நிறைவேற்றப்படும் இறுதிக் காட்சியின் ஒவ்வொரு வினாடியும் சட்டத்தின் குரூரமான தன்மை நெஞ்சை உலுக்குகிறது.

ஜினோவாக நடிக்கும் அலன் டெலன் - இவரே தயாரிப்பாளரும்கூட, சிறைஅதிகாரி ஜேர்மேயாக நடிக்கும் ஜீன் பேசல்; இருவரும் மிகைபடாத நடிப்பு மனதில் ஆழப்பதிந்து விடுகிறது. இருவருமே நகரத்தில் வாழும் இருவராக படத்துக்கு உயிரூட்டுகின்றனர். நெறியாளர் ஜோசி ஜியோவனி (Joze Giovanni) உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்.

இப்பிரான்சியத் திரைப்படம் அண்மையில் 'யாழ் திரைப்பட வட்டத்தினால் திரையிடப்பட்டது. இத் திரைப்பட வட்டம் தனது முதலாவது பருவத்தில் ஐந்து திரைப்பட காட்சிகளை ஒழுங்கு செய்திருந்தது.

1. பயமற்றவர்கள் (Fearless-பிரான்ஸ்)
2. 'கோழை' (The coward-செகோசிலவாக்கியா)
3. 'புற்றுநோய்' (Rak - பிரான்ஸ்)
4. ஆறு இந்திய விவரணத் திரைப்படங்கள்.
5. 'போர்க்கப்பல்' (Battleship Potemkin-றஸ்யா

வியாபரச் சூழலில் இத்தகைய திரைப்படங்களைக்காணும் வாய்ப்பு இவ்வாருடை அமைப்புகள் மூலமே தரமுள்ள ரசிகர்களைச் சென்றடைய முடியும், இவ் அமைப்புகளைப் பலப்படுத்துவது ஆரோக்கியமான கலை வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும்.

— சசி கிருஷ்ணமூர்த்தி


**A. K. Selvanayagam. Television Technology Institute.**

- தொலைக்காட்சிக் கருவிகளின் இயக்கம்—பராமரிப்பு—பழுது பார்த்தல் போன்றவற்றின் பூரண பயிற்சி,
- வர்ணத் தொலைக்காட்சி பற்றிய பூரணத்துவமான பாடங்கள்.
- சிற்றி அன்ட் கில்ஸ் (லண்டன்) [City & Guilds (Lond)] பரீட்சை எடுப்பவர்களுக்கான விசேட ஒழுங்குகள்.
- ஆவணியில் ஆரம்பமாகி நடைபெறுகிறது.
- அடுத்த மாணவர் தொகுதிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன,

**ஆ. க. செல்வநாயகம்**

**தொலைக்காட்சி, தொழில்நுட்ப கல்வி நிலையம்**

விபரங்களுக்கு:

**97, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிச் சிறுகதை:



# பலவீனங்களே பலங்கள்

கணபதி கணேசன்

காத்தாயி செத்துப் போனாள். முடிவற்ற உறக்கம் என்று எல்லோரும் கூடிமுடிவு செய்தபின் ஊரைக்கூட்டிஒப்பாரி வைத்து அழுதுவிட்டு பெயரை நீக்கி பிணம் என்று பெயரிட்டுச் சுடுகாட்டில் கொண்டு போய்ச் சுட்டுவிட்டு நீரில் மூழ்கி நினைவிழந்து செல்பவர்கள் என்று திருமந்திரம்சொன்னதைப்போல் அவனால் இனிமேல் வாழ முடியாது.

"ஏன்?" அவனொரு வெட்டியாள். கீழ்மகன். தாலி கட்டிய மனைவியை உடல்வெந்து சாம்பலாகும்வரை பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க வேண்டியவன்.

அவன் உடல் வேதனைத் தீயினால் வெந்து கருகிக்கொண்டிருக்கையில் புறப்புலன்கள் விழிக்க, விழிப்புற்ற உடலின் உணர்ச்சி அதன் வேகத்தை தாண்டி வேதனையை உணரும் பொழுது, வேதனை என்ற எல்லையை மீறி அவனுள்ளே ஏதோ ஒரு உணர்வு விழித்துக் கொண்டது. கண்களை அகலவிரிந்து எரியும் சிதையை வெறித்து நோக்கினான். சிதைப் பிணம் துள்ளி எழுவது அவன் கண்களுக்கு தெரிகிறது.

"ஆ! அதுநின்ற கோலம்!" உடலெல்லாம் நெருப்பின் கனல் தீ சுட்டுப் புண்ணாகி சதை எரிந்து நீர்வடியும் பிணக்கோலமாக உடம்பிலே சுற்றியிருந்த தீச்சுவாலைகளே ஆடையாகவும், கரித்துண்டையே உடலாகவும், அரைகுறையாக அழிந்துபோன கறையான் புற்றைப்போல் நின்றிருந்த அவள் அவனைப்பார்த்து, "ஏ! முனியா கொலைகாரப் பாவியே! என்று திட்டுவது போல் இருந்தது.

கையில் இருந்த நீண்டதடியைப் பற்றி பிணத்தின்மேல் ஒரு போடு போடுகிறான் முனியன். தீச்சுடர்கள் திக்கெட்டும் பரவுகின்றன. சிதை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. சிதைந்து கிடக்கும் சிதையை ஒரு தடவை பார்க்கிறான் அவன். அவன் பக்கத்தில் செக்கர் ஒளியை அள்ளி வீசியவாறே எரிந்துகொண்டே நீட்டி நிமிர்ந்து கிடக்கின்றது பிணம். தூரத்தில்ஊரின் நடுவே உள்ள ஒருநாயின் ஊளைச் சத்தம் கேட்கிறது, ஆந்தையின் அலறல் சத்தம் அச்சுடுகாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. ஆனால் முனியனது நினைவுகளோ கடந்தகால நிகழ்ச்சிகளை அசைபோட்டுக் கொண்டிருந்தது.

X X X X

அவன் காத்தாயியை மணமுடித்து நேற்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. அவனைப் பொறுத்தவரை அவன் ஒரு குடிகாரன், சூதாடி அவன் நிலைகண்டு காத்தாயி ஏக்கமும் சோகமுமே நிலைத்துக் கண்ணீர் வடிப்பதென்றே அவனிடம் பெற்றுக்கொண்ட இன்பம்.

நேற்று முன்தினம் நாடகம் பார்க்க போகவேண்டும் என்று கணவனை வற்புறுத்தினாள். அவனும் தன்வேலைகள் முடித்துவந்து அழைத்துப் போவதாகக் கூறினாள். ஆனால் நடந்ததோ வேறு!

காத்தாயி முனியனை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள். முனியன் வருகின்றதாக தெரியவில்லை அவளுக்கு கோபம் கோபமாக வருகின்றது. படலையைத் திறந்து மீண்டும் கண்ணுக் கெட்டிய தூரம்வரை பார்வையை ஓட்டுகிறாள். முனியன் வரவில்லை! உம் என்ற பெருமூச்சுடன் உள்ளே நுளைந்து அவள் கொடியில் தோய்த்துலர்ந்து கொண்டிருந்த சேலையை எடுத்து அவசர அவசரமாக சுற்றிக்கொண்டே கதவு நிலைமேல் வைக்கப் பட்டிருந்த கண்ணாடியை எடுத்து அந்தக் குறுகிய வட்டத்திற்குள் தனது முகத்தைப் பார்த்துக் கொள்கிறாள். பவுடர் என்ற பெயரில் கடதாசியில் சுற்றிவைக்கப்பட்டிருந்ததைத் தனது முகத்தில் பூசிச் சரிபார்த்துக் கொள்கிறாள். பவுடர் என்ற பெயரில் கடதாசியில் சுற்றி வைக்கப்பட்டிருந்ததைத் தனது முகத்தில் பூசிச்சரிப்படுத்திக் கொள்கிறாள்.

"இந்த இருட்டுக்குள்ள எங்கேயடியம்மா போகப்போகிறே" தான் கேட்டதிற்காகக் காத்தாயி கோபிப்பாளோ என்ற பயத்துடன் அவளை வினவுகிறாள் முனியனின் தாயார்,

"நான் நாடகத்துக்குப் போகப் போகின்றேன் மாமி"

"அவனை இன்னும் காணேமே தனியாகவா போகப்போகிறே?"

"ஆமாம்"—அவள் குரலில் அலட்சியம் தொனிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதற்கில்லையடியம்மா இரவாச்சே என்று சொன்னேன் அதற்குள்ளே நான் ஏதோ மாமியார் ஸ்தானம் கொண்டாடுறன் என்று கடுகடுக்கிறியே'' என்ருள் மாமியார்.

''நீங்க என்ன வேண்டுமானுலும் கொண்டாடுங்கோ! ஆனுல் புருஷன் ஸ்தானம் என்னவென்று உங்கமகனையும் கொஞ்சம் புரிந்து கொள்ளச் சொல்லுங்கோ'' அவளுக்கு கோபத்தில் இப்படித்தான் வார்த்தைகள் நெருப்பு நெருப்பாக வரும்.

''நான்என்ன பண்ணுவேன்' என்றபடியே வயிற்றிலே ஒரு தடவை அடித்துக் கொண்டாள் மாமியார்.

''நீங்கதானே பெத்தீங்க! வேதனைப்படத்தானே வேண்டும் அதோட ஊரான் வீட்டுப்பெண்ணையும் கட்டிவைச்ச பாவத்துக்கும் சேர்த்து அடித்துக்கொண்டு அழுங்கோ!''—என்றவாறே வீட்டை விட்டு வெளியேறுகிருள். காத்தாயி.

''என்ன இருந்தாலும் புருசனிடத்தில் ஒருவார்த்தை சொல்லாமல்...'' வசனத்தை முடிக்காமல் இரைந்து கொண்டே மருமகள் மீது கொண்ட கோபத்தை ஆற்ற வழியில்லாமல் கையில் இருந்த வெத்திலைத் தட்டத்தை 'டொங்' என்ற சத்தத்துடன் வைக்கிருள்.

''ம் பெரிய புருஷன்... மகா கருதினையான புருசன்'' என்று முணுமுணுத்தவாறே இருளில் விரைந்து செல்கின்ருள் அவள்.

தெருவில் சனங்கள் கூட்டம் கூட்டமாக சோடி சோடியாக போய்க் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்க்கும்பொழுது காத்தாயின் இதயம் ஏக்கமுறுகின்றது, ''என்புருசனும் இருக்கிருனே! சுடலைப்பேய்!'' என்று மனத்துள் கருவியவாறு கூட்டத்துக்குள் புகுந்து விரைந்து செல்கிருள் அவள்.

சிலசமயங்கள் அவளுக்கு இப்படித்தான் ஒரு வெறிபிறக்கும், ஊனம் அடைந்து குறைப்பட்ட நோயாளிக்குப் பிறக்கும் வெறி போன்றது, அது! அதை எப்படியாவது வெளிக்காட்டிஞல்தான் அவளது வெறி அடங்கும். இது அவளுடைய பலவீனம். பலம்கூட அதுதான்.

வாழ்வில் ஏற்பட்ட, அனுபவித்த, இதயத்துக்கு மட்டுமே புரியக்கூடிய அந்தக் குறைக்காக அவள் அவனை அலட்சியப்படுத்திஞள் ஆனுல் அவன் அவளை அலட்சியப் படுத்திஞல்தானே! இவள் அவனை அலட்சியப் படுத்துவது அவனுக்குப்புரியும். எப்பொழுதாவது ஒருநாள் அவளை அதிகாரம் பண்ணுவதுதான் புருஷலட்சணம் என்று எண்ணி இருந்தான் அவன் அந்தச் சமயங்களில் எல்லாம் அவன் அவளைச் சுடுசொற்களால் —கொடிய வார்த்தைகளால் ஏசுவான். அவளது அடிவயிற்றில் இருந்து பீரிட்டுக் கொண்டுவரும் வார்த்தைகளை பொருட்படுத்தாமல் கண்மூடித்தனமாக அவளை அடித்து நொருக்குவான், அவன். அவனது பலவீனமான பாசத்தை காட்ட அதுஒன்றுதான் வழி.

அன்றும் அவன் வழக்கம் போல் சுடலை வேலைகளை முடித்து விட்டு வீட்டிற்கு வந்திருந்தான் குடித்துவிட்டுத்தான்.

''காத்தாயி எங்கே?''

''நாடகத்துக்குப் போயிருக்கா''

''யாரைக் கேட்டுப்போனு!''

''உன்னைத்தான்! உன்னைக் கெதியா வரச்சொன்ஞளாம். நீ வரவில்லை! அவமட்டும் தனியாகப் போயிட்டா!''

ஓ! அவளுக்கு இப்ப ரெம்பத் திமிர் உண்டாயிற்று இந்த இருட்டில் அதுவும் தனியா... ஊம்... வரட்டும் பேசிக்கொள்கிறேன்'' என்று கறுவிஞன் அவன்,

''ஏன்டா முனியா இப்ப என்ன தப்புப் பண்ணிட்டா அவ இப்படி இதுக்குள்ள அடைபட்டு கண்ணீர் வடிக்கிறதைக் காட்டிலும் போயிட்டுத்தான் வாயேன் என்று நான்தான் அனுப்பிவைச்சேன்,'' என்று சமாதானம் செய்கிருள் தாயார் — மனதுக்குள்

## ஆத்ம ஆராதனை

வீணைமேதை எஸ். பாலச்சந்தரிடம் அவரின் சினிமாவாழ்வைப் பற்றிக்கேட்டபோது அவர் கூறியது.

''சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை''

கவிஞர் 'வாலி'யிடம் அவரது சினிமாப் பாடல்களையும் தனிப் பாடல்களையும் பற்றிக்கேட்டபோது அவர் கூறியது.

''சினிமாப்பாடல்கள் நிர்ப்பந்தத்தால் எழுதப்படுவது மற்றவை நிம்மதிக்காக எழுதப்படுவது.

பிரபல இஸ்லாமிய — சிங்களப் பின்னணிப் பாடகருமான மொகிதீன் பெக் சினிமாப் பாடல்கள் பாடுவதை நிறுத்தியது பற்றிக்கேட்டபோது அவர் கூறியது.

பணத்திற்காக சினிமாப் பாடல்களைப் பாடுவதைவிட அமைதிக்காக சில பக்திப் பாடல்களைப் பாடிஞலே போதும். அதிலுள்ள நிம்மதி வேறெதிலும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்கப் போகின்றதோ என்ற தவிப்புடன்.

''சரிசரி, போய்தொலையட்டும், என்று கூறியவன் சால்வையை எடுத்துத்தோளில்போட்டுக் கொண்டே மீண்டும் கள்ளுக் கொட்டிலை நோக்கிப் புறப்பட்டான். குடித்தான். புதியகள்ளின் ஒவ்வொருமிடறும் உள்ளே இறங்க, இறங்க அவனுக்கு எங்கோ ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது, பொழுதானதே தெரியவில்லை அவனுக்கு. தள்ளாடித்தள்ளாடி நடந்துவந்த அவன் மெல்லத் திண்ணையில் சாய்கிறான்.

ஆளரவம் கேட்டு வெளியே வந்த காத்தாயி, அவனுடைய கோபத்தைக் கண்டதும் அவளுள்ளே இனம் புரியாத பயமொன்று ஏற்படுகின்றது.

''உள்ளே வந்து படுங்கோ! இப்படித் திண்ணையில் பாயும் இல்லாம...''—ஏதோ வார்த்தைகளை மென்றுகொண்டே கூறுகிறாள் அவள்.

அவள் குரல் கேட்டதும் அவனதுகோபம் ஆத்திரமாக ஆக்ரோஷமாகக் கிளம்புகின்றது. கோபத்தின் பயங்கரத்தில் அவளைப்பார்த்து உறுமியவாறே ''ஏண்டி எங்கேயடி போனே! உனக்கு என்ன திமிரடி, மூதேசி ஓடுகாலிநாயே!

''நான் ஒன்றும் ஓடுகாலி இல்லை. உங்களைக் கேட்டுவிட்டுத்தான் போனேன். நீங்க நேரத்தோட வராததிற்கு நான் என்ன பண்ணுவேன்,'' காத்தாயி சற்று சூடாகத்தான் சொன்னாள். இது தான் அவளது பலம், ஆனால்அவனது பலவீனத்தை உணர்ந்த அவளோ அடுத்து என்ன நடக்குமோ என்று எண்ணிப் பயந்தாள்.

''என்னவோப்பா...நீங்க எக்கேடாவது கெட்டுப்போங்க! என்றவாறே வீட்டின் பின்பக்கம் போய்விட்டாள். முனியனின் தயார். அவர்களிடையே சண்டை வரும் சமயங்களில் அவள் இப்படித்தான் நடந்துகொள்ளுவாள்.

''சொல்லிட்டா மட்டும் போதுமா? எண்ட உத்தரவில்லாம எப்படி நீ வீட்டைவிட்டு போவாய்!'' என்றவாறே எழுந்து நின்ற அவன். அவளது கூந்தலைப் பிடித்து இழுத்து கீழேதள்ளினான்.

கீழே விழுந்த அவள் மீண்டும் ஆக்ரோசத்துடன் கத்தினாள் ''புருசனா? இருந்தாத்தானே உன்கிட்ட அனுமதி கேட்க, சீ நீயும் ஒரு புருசனா?'' அவளது வார்த்தைகள் ஒருமையில் நெருப்புத் துண்டங்களாகத் தெறித்தன.

அவனுக்கு வந்தகோபத்தில் அகன்ற விழிகளைக் காத்தாயின் மேல் பாய்ச்சினான் முனியன். அவளது கழுத்தில் தொங்கிய மஞ்சள் கயிறு ''அவள் உனக்கே உரிமையானவள் அவளை நீ என்னவேண்டுமானாலும் செய்யலாம்'' என்று அவனுக்கு கூறுவதுபோல் இருந்தது.

என்ன தோன்றியதோ தெரியவில்லை, பயங்கரமான உறுமலுடன் அவளை நெருங்கினான். உரமேறிய கரங்களினால் அவளது முகத்தில் ஓங்கிப் பலமாக அறைந்தான். அவனது கரங்கள் அசுர வெறியுடன் அவளது கழுத்தினை இறுகின. நாக்குளர கண்கள் பிதுங்க, அப்படியே முனியனின் கையில் துவண்டு விட்டாள் காத்தாயி.

ஐயோ! காத்தாயி! நான் உன்னைக் கொன்றுவிட்டேனா?

X X X X

''காத்தாயி'' வெந்து மாமிசப்பிண்டம் போல் தொங்கிய அவனது உதடுகள் துடித்தன. அவனது கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அவன் அழுகிறானா? யாருக்காக அழுகிறான்? அவன் இதுவரை யாருக்காகவும் அழுததில்லை. கண்ணீர் என்பது அவனைப் பொறுத்தவரை மனதின் அசுத்தம்பட்ட தண்ணீர். ஒரு சொட்டு கண்ணீரும் சிலஉப்புக்களும் சேர்ந்த நீர்த்துளிகள் அவ்வளவுதான். எரியும் சிதை மேல் இடப்பட்ட பனை ஓலைகளின் மொட மொடப்பும், கார்டயர் உருகும் நாற்றமும் அவன் கவனத்தை ஈர்க்கவில்லை. கோலை எடுத்து எரியும் டயரை அப்படியே நெட்டித் தள்ளிவிடுகிறான் அவன்.

''நீ ஒரு கொலைகாரன்... கொலைகாரன்...'' என்பதுபோல ஆந்தையின் அலறல் ஒலிக்கின்றது.

''ஓம் நான் கொலைகாரன் தான். நான்தான் என் காத்தாயியைக் கொன்றேன். காத்தாயி... என்னை மன்னிப்பாயா?'' என்றவாறே முகத்தைக் கைகளால் பொத்தியவாறே கதறுகிறான். அவன் அருகில் எரிந்துகொண்டிருந்த சிதை ஒன்று தணிந்தது. ஆனால் முனியனின் அறிவுமட்டும் தெளியவில்லை. சலனமற்ற நிலையிலே தேங்கித் துடித்து மேலோட்டமாகத் தெளிந்து உள்ளூரத் தெளிவற்றுப் புரண்டு புரண்டு கொண்டிருந்தது அவனதுநினைவு.

மனைவியைக் கொன்றுவிட்ட அவன் இதயம் அவளுக்காகத் தேம்பித்தேம்பி அழுதது. அழுவதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

மிக அண்மையில் காத்தாயி முனியனை அழைப்பது போன்ற ஒரு உணர்வு, திரும்பிப் பார்க்கிறான்...

இதோ சோதிவடிவாக ஒளிப்பிளம்பாக காத்தாயி முனியனை இருகரம் நீட்டி அழைக்கிறாள்.

(யாவும் கற்பனை)

டாக்டர்: உன்னையார் ஆஸ்பத்திரிக்கு சாராயம் கொண்டு வரச் சொன்னது.

பையன்: அப்பா குடிக்கும் தண்ணியை சோதிக்க வேண்டுமென் நீர்களே.

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகமாலிகை

-நாநதீயன்

● அன்று சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகை ஆசிரியர் குழுவில் கடமையாற்றிய எனது நண்பரான திரு. பொன்னுத்துரை அவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் முருகபக்தராக வாழ்ந்து கொண்டிருக்கிறார். சமீபத்தில் நல்லூரில் அவர் அங்கப் பிரதட்சணம் செய்துவிட்டு வரும்போது வீதியில் அவரைச் சந்தித்தேன்,

''ஏன் அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்கிறார்கள் என்று தெரியுமா?'' என்னைக் கேட்டார் அவர்.

''ஏதோ... நேர்த்திக்கடன்... காரணமாக இருக்கலாம்...'' என்று சமாளிக்க முயன்றேன்.

''இல்லை... செல்லப்பாச்சாமி, கடைச்சாமி, யோகர் சுவாமி போன்ற புனித ஆத்மாக்கள் நடந்து வலம் வந்த திருமண் இது... அந்தமண்ணில் நாம் புரளும் போது நாமும் புனிதமாகின்றோம் தெரியுமா?...'' என்றார்.

—அவர் சொன்ன இப்பதில் என்னை மகாகவிபாரதியை நினைவு படுத்தியது·

ஒருசமயம் பாரதி ரயிலில் ஏறும்போது தவறிவிழுந்துவிட்டார். விழுந்தவர் புரண்டு கொண்டேயிருந்தார். அவரைத்தூக்கிவிட முயன்ற ஒருவரிடம் அவர் ''இது புத்தனும், புனித ஞானிகளும், சித்தர்களும் நடந்த புண்ணிய புழுதி... இது என்மீது படுவதால் நான் புனிதமாகின்றேன்'' என்றாராம் —எனக்கு ஓர் எண்ணம். அச்சுவேலியைப் பார்க்கும் போது அந்தமண்ணில் அங்கப் பிரதட்சணம் செய்தாலென்ன எனத் தோன்றுகின்றது.

தம் ஆற்றல் அனைத்தையும் ஒடுக்கி... உலகம் உயிர் வாழப்பயிர் செய்ய வேண்டுமென்ற ஒரே சித்தத்தோடு வாழும் விவசாயச் சித்தர்கள் நடமாடும் மண் அது.

●———●——●

● மருதனாமடத்தில் இருந்து யாழ்பாணம் போகும் பேருந்தில் பாய்ந்து நுழைந்து கொண்டேன். ஒரே நெரிசல். இருக்க இடம்கிடையாது, அருச்சுனன்போல் ஒற்றைக்காலில், தவமியற்றி நின்றேன்.

அடுத்த பஸ்தரிப்பில் பஸ் நிற்கிறது. எவரும் இறங்கவில்லை.

ஆனால் ஒருதாய், கைக்குழந்தையுடன் தட்டுத்தடுமாறி ஏறிக்கொண்டாள். பஸ் புறப்பட்டது.

ஆண்கள் எல்லோரும் 'அம்மிக்கல்' போல் அசையாது அமர்ந்திருக்கிறார்கள் 'யாராவது எழுந்து இடம்தர மாட்டீர்களா'' என்ற பார்வை யாசிப்புடன் தள்ளாடியபடி நின்றாள் அந்தத்தாய்.

''இங்கை வாபிள்ளை இப்பிடியிரு...''

பஸ் நெரிசல் மத்தியில் எழுந்த குரலை கவனித்தேன்.

தான் எழுந்துநின்று தன்னிடத்தைக் கொடுத்தது. ஒரு கிழவி

□———□——●

● நகைச்சுவை நடிகர்கள் குணசித்திர பாகத்தில் நடித்தால் கலைக்களை குன்றாமல் நடிப்பார்கள் என நகைச்சுவை நடிகர் நாகேஷ், பலபடங்களில் நிரூபித்து வருகிறார், ஏற்கெனவே அமரர் சந்திரபாபு, தங்கவேலு போன்றவர்கள் குணசித்திர பாத்திரங்களில் நடித்துப் புகழ்பெற்று மக்கள் மனதில் நிலையாக நிறைபவர்கள்.

அக்காலத்து யாழ்ப்பாண நாடகமேடைகளில் பிரபல்யமான, நயமான நகைச்சுவை நடிகராக விளங்கியவர் பபூன் செல்லையா அவர்கள்.

கிராமத்தில் ஞான சவுந்தரி நாடகத்தில் நகைச்சுவைக்கு எதிரான குணசித்திரப் பாத்திரமாகிய 'கத்தோலிக்க குரு'வாக அன்று அவர் நாடகத்தில் தோன்றியபோது அங்கிருந்த ரசிகர்கள் தாம்தேவாலயத்தில் இருக்கின்றோமா என்ற பிரமையில் எழுந்து நின்று தலைகுனிந்து ஆழ்ந்த வணக்கத்தில் நின்றார்கள்.

□———□——●

● எனது நண்பனுடன் பேசிக்கொண்டு நின்றேன். அப்போது அவ்வழியே போன மாணவனை எனது நண்பர் அருகில் அழைத்தார். அவருக்கு அந்த மாணவனை நன்கு தெரியும். அவர் அவனிடம் கேட்டார்.

—''தம்பி நீர் இப்ப எந்த ரியூட்டறியில் படிக்கிறீர்...''

அந்தக் கேள்வியைக் கேட்டதும் எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''தம்பீ நீர்எந்த பாடசாலையில் படிக்கிறீர்'' என்று கேட்ட காலம் அந்தக்காலம் — அது மலையேறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிச் சிறுகதை:

# பாஸ்



மறைவாக விரித்துப் பிடித்த உள்ளங்கையை எடுத்துவிட்டு புத்தகத்தில் கண்ணை ஓட்டினான் சிவ ராசன்.

இரண்டுவரி படித்திருக்க மாட்டான். காற்று மீண்டும ஊதிச் சுடரைச் சுழற்றியது. வட்டம் வட்டமாக இந்த விளக்கின் சுடரைச் சுழற்றுவதில் இந்தக் காற்றுக்கு, என்னதான் இன்பமோ? சுடர்பதறி நடுங்கிக்கொண்டிருந்தது.

சிவராசன் இப்போது இரண்டு கைகளையும் சிம்மினிபோல் குவித்துப் பிடித்து விளக்கு அணைந்து விடாமல் மறைத்தான்...

சுடர் நிமிர்வதும் மீண்டும் காற்றைக் கண்டு நடுங்குவதுமாகத் தவித்துக் கொண்டிருந்தது.

சிவராசனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. நாளை விடிந்தால் சோதனை. இந்தப் புத்தகத்தை இன்றுதான் தருமனிடம் வாங்க முடிந்தது. அதுவும் எத்தனை நாட்களுக்கு முன் சொல்லிவைத்து மன்றாடி வாங்கினான் அவன், அதை இன்றே படித்துவிட்டு ஒன்பது மணிக்குமுன் நித்திரைக்குப் போனால்தான் காலையில் எழுந்திருக்கலாம். சோதனையிலும் நருகன் எழுதலாம்.' என்ற எண்ணத்தோடு அதை வேகமாகப் படித்து முடித்துவிட அவன் முயன்று கொண்டிருந்தான்... ஆனால் இந்த விளக்கு...

---

தனது திருமணத்திற்காகச் சேர்ச்சிற்கு போகும் வழியில் விதிவிபத்தொன்றில் சிக்கிய ஹாலிவுட் நடிகர் ஒருவர் அருகிலிருந்த தபாற் கந்தோரில் போய் 'சேர்ச்'சிற்கு ஓர் அவசரத்தந்தி கொடுத்தார்—

> ''மூன்று மணிநேரம் தாமதமாகும் — நான் வரும்வரையில் வேறுயாரையும் திருமணம் செய்யாமல் தடுத்து வைக்கவும்''

---

**எஸ். கே. விக்னேஸ்வரன்**

தங்கை லக்சுமிமீது அவனுக்கு கோபங்கோபமாக வந்தது. நுளம்புக் கடியால் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருக்கும் அவளை ஒருமுறை தூக்கிநிறுத்தி நாலு சாத்துச் சாத்தினால் என்னஎன்று கூட நினைத்தான். பின்னேஎன்ன அவளாலல்லவா இந்தக்காற்றுக்கு இப்படிப் பயப்பட வேண்டியிருக்கிறது? என்னமாதிரி இருந்த சிமினியை உடைத்துச்சிதறச் செய்து விட்டாள்! முன்பே அது மழை நீர்பட்டு வெடிப்போடிக் கிடந்த தாயினும், அவன் அதை எவ்வளவு அவதானமாகப் பாவித்து வந்தான்... ஆனால் முந்தநாள் இந்த லட்சுமிக்கழுதை அதை எடுத்து உடைத்து விட்டாளே... இந்த மூண்டுநாள் படிப்பு இப்படித்தான் போகிறது புதுச்சிமினி வாங்க இரண்டு மூன்று ரூபாயாவது வேண்டும். இரண்டு ரூபாய்க் காசுக்கு அவன் எங்கே போவது? இருக்கின்ற ஒரே விளக்கான மேசைவிளக்கும் எண்ணைவிட அவர்கள் படுகின்ற பாடு... இந்த நிலையிலே சிமினியும் ஒன்று புதிதாக வேண்டுமென்றால்...?

தகப்பன் பொன்னுத்துரை காலமானபின் தாய் பாக்கியம் ஏதோ ஒருமாதிரி உடலை முறித்து, அவர்களுக்குச் சாப்பாடு போடுவது போதாதென்று இவைகளும்வேறு செலவுகள், என்றால்... இத்தனைக்கும் அவள் ஒரு 'வருத்தக்காரி

மாதத்தில் 'அரைவாசி'' நாள் வருத்தமெண்டு' படுத்திருப்பாள்... இந்த இழுப்புநோய் எப்போது வந்ததோ தெரியாது, அவளுக்கே அது ஞாபகமில்லை... ஆனால் இனி அது அவள் 'சாகமுன்னம்' போகாது என்பது அவள் முடிவான முடிவு.

—ஆனாலும் அவள் மகன் சிவராசனை நல்ல எதிர்பார்புகளுடன் படிப்பிக்கிறாள்.

சிறிது நேரம் சுழன்று சுடருடன் நர்த்தனமாடிய காற்றுக்கு அந்த விளையாட்டு அலுத்து விட்டது போலும். 'குப்'பென்று அதை அணைத்து விட்டு 'இது ஒரு அற்ப விஜயம் எனது இலக்கு வேறு, என்பதுபோல தொடர்ந்தும்வீசிக் கொண்டிருந்தது.

இருள் கப்பிவிட்டது. ஒன்றுமே தெரியாத நிலை.

சிவராசனுக்கு அழுகையே வந்து விடும்போல இருந்தது.

புத்தகத்தின் ஒற்றைகள் காற்றில் படபடத்தன. 'நெருப்புப் பெட்டியை எங்கையெண்டு தேடிஎடுக்கிறது?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா— அம்மா—' —இரண்டு தடவை கூப்பிட்டுப் பார்த்தான் அவன். உடல் சோர்ந்துபோய் படுத்துவிட்ட பாக்கியம் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்ததால், அவள் அருளவில்லை. மெதுவாக அடுப்படிப் பக்கமாக எழுந்து போனான். ஒரே இருட்டாக இருந்தது. ஒருமாதிரி தட்டித்தடவி, அடுப்புக்கு அருகில் வந்துவிட்டான்.

'தேத்தண்ணி வைச்சிட்டு இங்கினைதான் வைச்சிருப்ப' மெல்லக் குந்தியிருந்து கொண்டு அடுப்பு மூட்டிலும், அதன் அருகிலும் கைகளால் தடவிப் பார்த்தான் 'இங்கினைதான் கிடக்கும்'-அவன் உதடுகள் முணுமுணுத்தன.

கையில் ஏதோ தட்டுப்பட்டது.

'ஆ... கிடக்குது'—மனதிலே ஒரு களிப்பு. எடுத்தான், 'நெருப்புப் பெட்டி'தான். ஆனால் குச்சியிருக்குமோ?' என்ற சந்தேகம் உடனே வரவே, கிலுக்கிப் பார்த்தான், சத்தம் இல்லை. பெருவிரலால் அதன் உள்ளறையைத் தள்ளி விட்டு விரலால் தடவிப் பார்த்தான். ஒரு குச்சியாவது ஓரத்தில் கிடக்குமோ என்ற நப்பாசை...

ஒன்றுகூட இல்லை. ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது அவனுக்கு. சா... இதுக்கை முடிஞ்சுது... வேறை இங்கினை கிடக்கும்...' அதைப் போட்டுவிட்டு மீண்டும் இருந்து துளாவினான்...

● உங்க மனைவி இறந்ததற்கு கவலைப்படாதீர்கள். ஆண்டாண்டு தோறும் அழுதாலும்மாண்டார் வருவரோ தைரியமாக இருங்கள்.

☐ எப்படித் தைரியமா இருக்கிறது. இப்போவெல்லாம் மாண்டவர் மீண்டார் என்றெல்லாம் பேப்பர்களில் வருகிறதே.

—மகேசு

'சா... இன்டைக்குப் படிச்சமாதிரித்தான் போலைகிடக்குது... இந்த இழவு நெருப்பெட்டியையும்காணயில்லை...'

'மற்றப் பெடியள் இம்மளைக்குப் படிச்சுக் கொண்டிருப்பாங்கள்... நான்...' அவன் பெருமூச்சு விட்டான்.

கைகள் நிலத்திலே தடவின. அடுப்பைத் தாண்டி அப்பாலும் தடவிப் பார்த்தான். 'மையிருட்டு ஒரு மண்ணும் தெரியேல்லை...'

இப்போதும் ஒருநெருப்புப்பெட்டி தட்டுப்பட்டது,

'அட இதுஅந்த முதல் நெருப்பட்டதான்...' எரிச்சலோடு அதை எடுத்து வீசினான்.

டக்கென்ற சத்தத்துடன் நெருப்பெட்டி விழுந்த இடத்தில் ஒரு மினுங்கல் 'அடுப்பிலை நெருப்பெண்ணும் நூரவில்லை... —அவனுள்ளே ஒரு குதூகல உணர்வு. வேகமாக எழும்பித் திரும்பினான். டங்... டணங்...

அலுமினியப் 'பேசன்' ஒன்று தட்டுப்பட்டு உருண்டது, வெளிப் படலையைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் சிவராசன்.

சோழகக் காற்றின் ஊதல் பலமாகத்தான் இருந்தது. வேலியோரத்துப் பூவரசம் குப்பைகள் அள்ளுப்பட்டுக்கொண்டு, முற்றப்பக்கமாக ஓடித்திரிந்தன.

விறகுக்காகப் பனம் மட்டைகள் 'அள்ளிக் கொண்டந்து' போடும் இடத்திலை மட்டைக் குவியலுக்கு மேலாக பன்னாடை எடுக்கும் போது கையிலே சுருக்கென்று ஏதோ குத்தின மாதிரி... உயிர் போவதுபோல வலித்தது. விறுவிறென்று எலும்புக் குருத்துகளூடாக ஏதோ ஏறுவது போன்ற உணர்வு...

விளக்கு கும்பியை உற்றுப்பார்த்தான் 'ஒரு மண்ணும்' தெரியவில்லை, கையை உதறிவிட்டுக் கொண்டான்... ஏதோ எரிவாக மேலே மேலே போவதுபோல...

கடையில் சாமான்கள் வாங்கிக் கொண்டுவரும் வழியில் மனைவியும் கணவனும் பேசிக்கொண்டது

● இந்தாருங்கள் இந்தத் தேங்காயெண்ணெயை நீங்கள் வைத்துக்கொண்டு அந்தமண்ணெண்ணெப் போத்தலை என்னிடம் தாருங்கள்.

☐ வேண்டாம் உன் புடவை பழுதாகிவிடும். மண்ணெண்ணெ மணக்கும். ஏன் திடீரென்று இப்படிக் கேட்கிறாய்?

● அந்தஎண்ணெயின் கலர் தான் என் புடவைக்கு மாட்ச் ஆக இருக்கிறது.

—மகேசு

'மட்டத்தேளாக்கும்... சனியன்' திட்டிக்கொண்டே பன்னாடையுடன் அடுப்படிக்குள் நுழைந்தான் அவன்.

பன்னாடையை உருட்டித் தணலைக் கிண்டினான். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறிய தணல் துணிக்கைகள் கிடைத்தன. தட்டி எடுத்து பன்னாடையில் மெதுவாக வைத்து ஊதினான்.

'ஊத... ஊதப்' புகை கண்ணுக்குள் புகுந்து கரித்தது. கடைவிழியால் நீர் கன்னத்தில் வழிந்தது.

கருகிய பன்னாடை பக்கென்று பற்றிக் கொண்டதும் அவன் உள்ளத்தில் இமயத்தை ஏறியடைந்த களிப்பு.

வெளிச்சத்தில் அடுப்படி ஓரளவு துலக்கமாகத் தெரிந்தது. அடுப்புக்கு அருகில் வேறு நெருப்புப் பெட்டி இல்லை. 'அப்ப அந்தப் பெட்டிதான்... குச்சி முடிஞ்சுது போலை...'

'அட... விளக்கை எடுத்தரவில்லையே... இனிப்போய் விளக்கை எடுத்து வாறக்கிடையிலை பன்னாடை எரிஞ்சு முடிஞ்சுபோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்பினுள் பன்னாடையை செருகிவிட்டு, அருகில் இருந்த கொக்காரைகள் இரண்டையும் எடுத்துப் புகுத்தினான். தீ, 'பனங் கொக்காரையில்' பிடித்து எரியத் தொடங்கியது.

'இந்தக் கொக்காரைகள் 'வெள்ளன' அம்மா கொண்டுவந்து போட்டிருக்க வேணும்... சமைக்க எடுத்த மிச்சம் போலை'

—'சரி, இனி நூராது விளக்கைப் போய் எடுத்தருவம்...'

விளக்கை எடுத்து வரும்போதே கைவலி சற்று அதிகமானதுபோல இருந்தது. கடிவாயில் இருந்த வலி சுற்று அதிகமாவது போலவும், அந்த விறுவிறுப்பு வேகமாக அதிகரிப்பது போலவும், இருந்தது. விளக்கைக் கொளுத்திக் கொண்ட சிவராசன் அடுப்படியுள் புளியைத்தேடி 'எப்பனை' எடுத்து, கடிவாயில் அப்பிக் கொண்டான்...

'இனிச்சரி' என்ற எண்ணத்துடன் அவன் திரும்பும்போதோ ஒரு ஓலைப்பெட்டியை எடுத்து அதனுள் விளக்கை மறைத்துப் பிடித்துக் கொண்டு போனான். 'நாளைக்குச் சோதினை... நல்லா எழுதோணும்...'

விளக்கை ஒட்டுச்சுவரில் வைத்துவிட்டு—அதுதான் அவன் மேசை மற்றப்புறம் காற்று வராமல் பெட்டியால் மூடிவிட்டு அவன் படிக்கத் தொடங்கியபோது, எங்கோ ஒரு ஒற்றைக்கோழியின் கூவல் கேட்டது...

'சாமக்கோழி கூவுது' — அவன் மனதிலே நினைத்துக் கொண்டான்.

கையிலே வலிமோசமாக அதிகரித்தது. கையை விறைப்பது போலவும் வயிற்றை என்னவோ செய்வது போலவும்...

அவன் கையை உதறிவிட்டுப் படிக்கத் தொடங்கினான்.

X X X X

தீ நாக்குக்கள் சட சடவென்று படர்ந்து எரிந்த வெக்கையால் திடுக்கிட்டு எழுந்தாள் பாக்கியம் பீதிகலந்த ஓவென்ற குழறல் ஒலி வாய்க்குள்ளே அடங்கிவிட, நாக்கு தடதடவென அடிக்க திகைத்துப்போய் ஒருகணம் மரமாக நின்றுவிட்டாள் அவள். தன்னைச் சுதாகரித்துக்கொண்ட பாக்கியம், லட்சுமியை வாரியணைத்தபடி எழுந்திருக்க முயன்றபோது எரிந்த தட்டி முறிந்து விழுந்த படாரென்ற சத்தமும், அதைத் தொடர்ந்து சுயாதீனமாகஉள்ளே நுழைந்த சோழக காத்தின் ஊதலால் பிரகாசித்த நெருப்புப் பெரிதாகி விட்டது.

மூச்சைப் பிடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தாள் அவள்.

வெளியே வந்தபின்தான் சிவராசனின் பிரக்ஞையே அவளுக்கு வந்தது. பெரிதாக எழுந்த தீ நாக்குகள் அவளை எதுவும் செய்ய ஏவாவல் செய்துவிடவே பெருங்குரலில் அலறினாள் அவள்.

—ஊரார் தீயை அணைத்துவிட்டு உள்ளே போய்ப் பார்த்தபோது கருகிய புத்தகமும் கையுமாக கிடந்த சிவதாசனின் உடல் மரத்திருந்தது. இவ்வளவு சூட்டிலும் கைவிளக்கின் நெருப்பு பெட்டியிலே பிடித்து, அது தட்டியிலே பற்றி, அது வீட்டிலே பற்றி இவ்வளவு சுவாலையாக எரியுமட்டும் —நித்திரையாகக் கிடந்து, எழுந்துவிடாமலே அவன் உடல் கருகியிருப்பது அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

—ஆனால் பன்னாடை எடுக்கும் போது, கையிலே 'குத்தியது' மட்டத்தேளெல்லப் பாம்பு என்பது சிவாாசனுக்கே தெரிந்திராத போது, அவர்களுக்கு மட்டும் எப்படித் தெரியப் போகிறது? அது மட்டும் தெரிந்தால் அவர்கள் இப்படி வியப்படையமாட்டார்கள்... —இனிச் சிவராசன் பரீட்சைக்காகப் படிக்க வேண்டியதில்லை.

ஏனென்றால், அவன்தான் பாசாகி விட்டானே!

## கலைத்துவம்




உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்களை ஜீவன் ததும்ப திரையில் பிரதிபலித்துக் காட்டிய ஹாலிவூட் நடிகரும், சிறந்த நடிப்பிற்காக "ஸேர்' பட்டம் பெற்றவருமான ஸேர் லோரன்ஸ் ஒலிவர் (Sir Lawrence Olivier) 15 ஆண்டுகளுக்குமுன் நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பற்றிக்கூறியது.

(இவர் மட்டும் ஹாலிவூட்டில் பிறந்திருப்பாரே யானால் தன் அற்புத நடிப் பாற்றலால் உலகம் முழுவதையுமே கவர்ந்திருப்பார்')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைச் சிந்து



சீனப் பெருமக்கள்
தமது—
சுபீட்சத்திற்கான
புரட்சிப்போர்
நடத்தியபோது-
சீனப்பெருஞ்சுவரில்
சுலோகங்கள்
எழுதவில்லை.

நிதி—
பின் கதவால்
வீட்டில் நுழைய
நீதி—
முன்கதவால்
வெளியேறுகின்றது.

வீதி ஓரம்
ஒரு ஓலம்...
ஓவியரையா
பிறந்தமேனியை
வரையப்போகும்
திரையால்
எனது—
நிர்வாணத்திற்கு

## ரசானுபவம்

கறிக்கு
உப்பு
கூடினாலும்
—குப்பை
குறைந்தாலும்
—குப்பை
கலைக்கு
உணர்வு
கூடினாலும்
—குப்பை
குறைந்தாலும்
—குப்பை

வர்மன்



## லண்டன் லட்டு



அவன்: உன்னுடைய சமையல் என்னுடைய அம்மா சமைப்பது போல் இல்லையே?

அவள்: உங்களின் சம்பளம் என் அப்பாவினுடையது போல் இல்லையே!

☐ ☐

ஒரு: ஜோனின் காதல் விவகாரம் துர்ரதிஷ்டம் பிடித்தது?

மற்: ஏன் என்ன நடந்தது அவள் மறுத்துவிட்டாளா?

ஒரு; இல்லை அவர்களுக்கு நேற்று திருமணம் முடிந்துவிட்டது.

☐ ☐

அவன்: நான் திருமணம் செய்தே இருக்கக்கூடாது?

இவன்; ஏன்?

அவன்: நான் குடிவெறியில் இருக்கும்போது அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை. குடிவெறியில்லாதபோது அவளை எனக்குப் பிடிக்கவில்லை.

☐ ☐

● ஒருசிறுமி தனக்குதம்பி பிறந்திருப்பதைப்போய் பார்த்துவிட்டு சொன்னாள்:
'எங்கள் தம்பிப்பாவுக்கு அப்பாவின் மூக்கும், அம்மாவின் கண்ணும் தாத்தாவின் பல்லும் அப்படியே இருக்கு...

☐ ☐

நீதிபதி: நீ ஏன் உன்கணவருக்கு விவாகரத்து வழங்க மறுக்கிறாய்...?

கிழவி: நீண்டகாலமாக என்னோடு நரக வாழ்க்கை வாழ்ந்தவர் என்னைவிட்டுச்சென்று சந்தோசமாக வாழவிடப் போவதில்லை.

நீதிபதி: ? ? ?

ஒரு; நான் எனது சகோதரன் விஷயமாக உங்களிடம் வந்திருக்கிறேன் டாக்டர்... அவன் தன்னை ஒரு கொட்டப்பாக்கு என்றே நினைத்துக் கொண்டிருக்கிறான்...

மனோதத்துவ டாக்டர்: அப்படியா?... எங்கே அந்த நோயாளி?

ஒரு: எங்கேயுமில்லை டாக்டர் இதோ என் 'பொக்கட்'டுக்குள்தான் இருக்கிறார்.

டாக்டர்: ? ? ?

☐ ☐

ஒரு; நான் நினைக்கிறேன் என் பையன்கள் மூவரும் வளர்ந்ததும் சர்வர்களாகத்தான் இருப்பார்கள்...

மற்; ஏன்அப்படிச் சொல்கிறாய்.

ஒரு: நான் எப்படிக் கூப்பிட்டாலும் அவர்கள் வருவதேயில்லை...

☐ ☐

பைத்தியகார ஆஸ்பத்திரியில் நோயாளி ஒருவரைப் பார்க்கவந்தவரின் கடியாரம் நின்று விட்டது, ஸ்டேசனுக்கு ரயிலுக்குப் போகும் அவசரத்தில் நேரம் பார்க்க ஆஸ்பத்திரியில் இருந்த மணிக்கூட்டைப்பார்த்தபடி அருகே நின்ற நோயாளி ஒருவரைக்கேட்டான் "இந்த மணிக்கூடு சரியா? அவன் சொன்னான் "அட பைத்தியமே...அது சரியானதாக இருந்தால் இங்கே ஏன் இருக்கப்போகிறது. ☐ ☐

டாக்டர்: கவலைப்படாதே சாராயம் ஓடும் நரம்புகளில் கொஞ்ச ரத்தமும் ஓடத்தான் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைஞர்க்கு ஒரு சொர்க்கம்

- சிற்றுண்டி வகைகள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- குளிர்பான வகைகள்

விசேஷ வைபவங்களுக்கு ஆடர்கள் ஏற்று இனிதாக வழங்கப்படும்.

# ரவர் கோப்பி அன் கூல் (B) பார்

324 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7891

கிளிநொச்சியிலே....

சகலவித விளைபொருட்களுக்கும் சாய்ப்புச் சாமான்களுக்கும்

விஜயம் செய்யுங்கள்

# எம். பி. வீரவாகு

கண்டி றோட், கிளிநொச்சி

பிரதம தபாற்கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி கியூ. 35/000


நூலுலகில் ஒரு கவிய நூல்

அழகை ஆராதனை செய்பவர்கள்

தமது சித்திரத் தையல்வேலைகட்குப் பாவிப்பது

**முயல் மார்க்** நூலே!

தயாரிப்பாளர்கள்:

# சம்பியன் திரெட்

# மனுபக்சரிங் கம்பனி.

கொழும்பு — 12


559, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 559, கே. கே. எஸ் வீதியில் உள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org